விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து *Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 22 சனிக்கிழமை (06.07.2002) தொலைபேசி 3378 ஒலி 199

தரமான மூக்கு கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும் சிறந்த முறையில் பற்களைக் கட்டிக் கொள்ளவும் மிதப்பு பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும் நாடவேண்டிய இடம்

பீ. ஜே. பர்னாண்டோ

542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

## நெல்லியடியில் நேற்று எழுச்சி மிகு கரும்புலிகள் தினம்

## ஆயிரக்கணக்கான மக்கள் உணர்ச்சி பூர்வமாகப் பங்கேற்பு

(துன்னாலை)

கரும்புலிகள் நினைவு நாள் நேற்று யாழ் குடாநாட்டில் மிகவும் உணர்வு பூர்வமாக எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

குடாநாட்டின் முக்கிய நகரங்கள் சந்திகள் மற்றும் பொது நிலையங்கள் வீதிகள் எங்கும் சிவப்பு மஞ்சல் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு பதாகைகள் கட்டப்பட்டு அலங்காரவளைவுகளும் நிறுத்தப்பட்டிருந்தன.

காலை 9.00மணிக்கு பொது நிலையங்கள் மற்றும் பாடசாலைகளில் பொதுச்சுடர் ஏற்றலுடன் கரும்புலிநாள் நிகழ்வுகள் உணர்வுடன் ஆரம்பமாகியது.

விசேட நிகழ்வுகள் முதற்கரும்புலி கப்டன் மில்லர் தாக்குதல் நடத்திய நெல்லியடி மாகா வித்தியாலயத்தில் மாலை 5.மணி க்கு ஆரம்பமாகியது.

அதற்கு முன்னோடியாக கரும்புலிகள் நிகழ்வுகளீல் கலந்து கொளவதற்காக தீவகம் வலிகாமம், தென்மராட்சி, மற்றும் வடமராட்சியில் திரண்ட மக்கள் வாகனப் பவனியாக நெல்லியடி சந்தியை மாலை 4.30மணிக்கு சென்றடைந்தனர்.

அங்கிருந்து மாலை 5மணிக்கு ஊர்வலமாக புறப்பட்ட மக்கள் கரும்புலிகளின பொது உருவப்படத்தை தாங்கியவாறு பான்ட்வாத்திய இசையுடன் நெல்லியடி மகாவித்தியாலயத்தை சென்றடைந்தனர்.

(10ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு முஸ்லிம்கள் ஹர்த்தால்

(கொழும்பு)

வாழைச்சேனையில் முஸ்லிம்கள் கொல்லபட்டமையையும், வர்த்தக நிலையங்கள் எரிக்கப்பட்டமையையும் கண்டித்து நேற்றுக் கொழும்பில் முஸ்லிம் வர்த்தகர்கள் ஹர்த்தால் அனுஷ்டித்தனர்.

நேற்று நண்பகல் தமது தொழுகையை முடித்து கொழும்பு, புறக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள வர்த்தகநிலையங்களைப் பூட்டி ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.(வ)

### அரசு-புலிகள் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல்பூர்த்தி

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் அரசு தீவிரம்

### பேச்சுவார்த்தை நடந்தே தீரும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் பீரிஸ்

(நமது நிருபர்)

**அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கான திகதி இன்னமும் முடிவாக்கப்படவில்லையாயினும் பேச்சு வார்த்தைக்கான நிகழ்சிநிரல் தயாரிக்கப்பட்டு பூர்த்தியடையும் தறுவாயில் உள்ளது. இவ்வாறு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரீஸ் நேற்றைய தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவையில் இடம்பெற்ற விடயங்களை அறிவிப்பதற்காக பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நேற்று அமைச்சர் பேராசிரியர் ஜி. எல்.பீரிஸ் கூட்டியிருந்தார். அம் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்திருந்தார்.

அம் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதிலேயே அரசு இப்போது தனது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறது. இது அரசாங்கத்தின் முக்கிய கடமையாக உள்ளது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இடம்பெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் சற்றுக் காலதாமதமானாலும் அப் பேச்சு வார்த்தை நிச்சயமாக நடக்கும்.

அதற்கேற்றவகையில் சமாதா

### பதவியை ராஜினாமா செய்க

## மூன்று முக்கிய அமைச்சர்கள் இன்று யாழ் வருகிறார்கள்

(யாழ்ப்பாணம்)

கல்வி மனித வள அபிவிருத்தி கலாசார அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு, பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரனிமல இராஜபக்ஷ மற்றும் பொது நிர்வாக அமைச்சர் வஜிர அபயவர்த்தன ஆகிய மூவரும் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

அமைச்சர்கள் மூவரும் இன்று யாழ் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம் பெறும் கலாசார காண்பிய நிகழ்வில் கலந்து கொள்வர். (இ)

### வெடி பொருள் கடத்தியவருக்கு ரூபா 2000 தண்டம்

(மந்திகை)

வெடிமருந்து மற்றும் துப்பாக்

### உயர் பாதுகாப்பு வலயமாக அம்பன்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதி உயர் பாதுகாப்பு வலயம் என படையினரால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அம்பன் பகுதி இராணுவ முகாமுக்கு முன்பாக அம்பன் பகுதி உயர் பாதுகாப்பு வல

வார்த்தை நிச்சயமாக நடக்கும்.

அதற்கேற்றவகையில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு அது இறுதி

(10ம் பக்கம் பார்க்க)

(மந்திகை)

வெடிமருந்து மற்றும் துப்பாக்கி ரவைகளை முகமாலை இராணுவச சோதனைச் சாவடி ஊடாக

(10ம் பக்கம் பார்க்க)

இராணுவ முகாமுக்கு முன்பாக அம்பன் பகுதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற வாசகம் பொறிக்கப்பட்ட விளம்பரப் பலகை தொங்கவிடப்பட்டுள்ளது.

(த.43)

பதவியை ராஜினாமா செய்த

## விமானப் படைத்தளபதி பொலிஸாரினால் கைது

(கொழும்பு)

விமானப்படைத் தளபதி ஏயார் மார்ஷல் ஜெயலத் வீரக் கொடி குற்றப்புலனாய்வுப் பொலிஸாரினால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

கடந்த மாதம் அவர் ஓட்டிச் சென்ற வாகனம் விபத்தில் சிக்கியதில் காயமடைந்திருந்த சாரதி மரணமடைந்ததை அடுத்தே விமானப் படைத்தளபதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று கொழும்பு நீதிமன்றத் தில் ஆஜர் செய்யப்பட்ட இவரை எதிர்வரும் 9ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

(ம)

## தென்னிலங்கை கல்விச் சமூகத்தின் சமாதானப் பேரணி யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கை கல்விச் சமூகத்தைச் சேர்ந்தவர்களின் சமாதானப் பேரணி நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்தடைந்தது.

தென்னிலங்கையைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வித்திணைக்கள அதிகாரிகள் அடங்கிய சுமார் 700 பேர் ஐம்பதிற்கும் மேற்பட்ட வாகனங்களில் யாழ் வந்துள்ளனர்.

சமாதானத்ததை வலியுறுத்தும் நோக்கில் வருகை தந்த இச் சமாதானப் பேரணியினர் மூன்று தினங்கள் யாழ் குடாநாட்டில் தங்கியிருப்பர்.

(10ம் பக்கம் பார்க்க)

# மண்ணுக்கு விடுதலை கிடைக்கும் வரை கரும்புலிகள் தமது கடமையைத் தொடருவர்

### புலிகளின் பிரமுகர் வே. பாலகுமாரன் உரை

(துன்னாலை)

எந்தவொரு சக்தியாலும் வெல்ல முடியாததும் எந்தவொரு நவீன கருவிகளாலும் அடக்க முடியாதது மான அற்புதமான போராயுதமாக மாறி எதிரிக்குப் பாரிய அழிவை ஒரு கணத்தில் ஏற்படுத்தக்கூடியவர்களே கரும்புலிகள்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் பிரமுகர் வே. பாலகுமாரன் நேற்றைய தினம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கரும்புலிகள் தின வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

இனிவருங்காலங்களில் நடக்கப் போவது பற்றி எங்களுக்கு நன்றாகத் தெரிகிறது. ஆனால் அதைப் பற்றி இப்பொழுது சொல்லத் தயாராக இல்லை. நடப்பன எல்லாம் நன்றாக நடக்கும் என்ற அடிப்படையில் அரசியல் பணியை மேற்கொள்ள நாம் துணிந்திருக்கின்றோம். அழிவில் இருந்து தான் ஆக்கம் பிறந்தது. கரும்புலிகள்

(10ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கைதான புலிகள் நேற்று விடுதலை

(திருமலை)

ஸ்ரீலங்காக் கடற்படையினரால் திருமலையில் வைத்துக் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் 5பேரும் நேற்று சரீரப்பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

(10ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### வகுப்புக்கள்

ஆண்டு1இல் இருந்து மேற்படிப்புவரை சிறந்தஆசிரியர்கள் வகுப்பில் சிறுதொகை மாணவர்களுடன் ஆங்கிலத்தில் கூடியகவனமும் அனுமதிக்கு தலைமை ஆசிரியர் ந விக்னேஸ்வரன் ஆச்சாரி 426(302) காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்

(5651)

### MATHS-2002

கணிதத்தில் புதிய பழைய பாடத்திட்டங்களில் A/ Lபரீட்சையில் A,B,Cபெறுபேறடைய இதுவரையும் சித்தியடையாதவர்களும் தரம்8,9,10உட்பட ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படுவர் ஆசிரியர் 85, சிவன்கேவிலடி, சிவன் கோவில் பின்புறம் திருநெல்வேலி

(5639)

### வகுப்புகள்

O/L 2002 பரீட்சைமாணவர்களுக்கான மாலைவகுப்புகள் ஆங்கிலம், கணிதம் விஞ்ஞானம், தமிழ், வர்த்தகம்,சிறுதொகை தனித்தனி கவனம் சித்திபெறுவது உறுதி வண்ணைசிவன் கோவில் அருகில் 426(302) காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம்.

(5492)

# நிலக்கீழ் வளத்திற்கான உரிமையை கோருவதற்கு இலங்கை நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையின் தென்பகுதியிலிருந்து200கடல்மைல்களுக்கு அப்பாலுள்ள கடல்பிராந்தியத்தின் நிலக்கீழ் வளங்களுக்கான உரிமையைக் கோருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுவருகிறது.

இக் கடற் பிராந்திய நிலப்பரப்பில் பெற்றோலிய வளம் இருக்கு மென ஆய்வுகளில் தெரிய வந்திருப்பதாக இயற்கை வளங்கள் துறை அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இப்பிராந்திய நிலப்பரப்புக்கான உரிமை கோரும் நடவடிக்கையை வெளிவிவகாரம் கடற்றொழில் நீரியல் வளத் துறை, இயற்கை வளங்கள் ஆகியவற்றின் அமைச்சுக்களும் அவற்றின் கீழ் உள்ள ஸ்தாபனங்களும் இணைந்து முன்னெடுத்து வருகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் கடற்றொழில் சட்டங்களின் படி ஒவ்வொரு நாட்டுக்கும் 200 கடல் மைல்கள்கொண்ட சடல் வளம் உரிமையாக்கப் பட்டுள்ளது.

எனினும், இச் சட்டத்தில் இலங்கைக்கு விசேட சலுகையொன்றும் அளிக்கப்பட்டிருப்பதாகவும் இயற்கைவளங்கள் துறை அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இச் சலுகையின்படி எதிர் வரும் 2009 ஆம் ஆண்டுவரையும் தென் பகுதியின் 200 கடல் மைல்களுக்கு அப்பாலுள்ள கடல் பிராந்தியத்தின் நிலக்கீழ் வளங்களுக்கு இலங்கை உரிமை கோரமுடியும்,

இப் பிராந்தியக்கடல்2 ஆயிரத்து 500 மீற்றர் தொடக்கம் 3 ஆயிரம் மீற்றர் வரை ஆழமுடையதாக இருக்கும்.

இங்குள்ள வளங்கள்குறித்த ஆய்வுகளை மேற்கொள்ள வென ஏழு மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் இந்நிதியை வெளிவளத் திணைக்களத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும். அவ் அதிகாரிதெரிவித்துள்ளார். (உ-3)

## வருடாந்த மஹோற்சவம்

(மந்திகை)

அல்வாய் மாலு சந்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறு தினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர் வரும் 16 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம் பெறவுள்ளன. (ஷ-23)

(அராலி)

சங்கானை அரசடி ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள்நடைபெறவுள்ளது.

(ஷ-214)

# வடமராட்சி கிழக்கு சவுக்கம் தோப்பு 30 ஏக்கரால் விஸ்தரிப்பு

(மந்திகை)

வடமராட்சி கிழக்கு மணல் காட்டுப் பகுதியில் 30ஏக்கர் நிலப்பரப்பில் சவுக்கு மர நடுகைத் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை சூழல் பாதுகாப்பு குழு மேற்கொண்டு வருகின்றது.

மணல் காட்டுப் பகுதியில் ஏற்கனவே உள்ள சவுக்கம் தோப்புடன் இணைந்து மேலும் 30 ஏக்கரில் சவுக்கம் மரங்களை நாட்டி அப்பகுதியில் ஏற்பட்டு வரும் மண்ணரிப்பு, மற்றும் காலநிலைமாற்றங்களை கட்டுப்படுத்தமுடியுமென நம்பப்படுகிறது.

அப்பகுதியில் மட்டுப்படுத்தி மண்ணை விற்பனை செய்து வரும் இவ் அமைப்பு அதன் மூலம் வரும் வருமானத்தினைக்கொண்டுவடமராட்சி கிழக்கில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் சூழல் பாதுகாப்பு குழுவின் தலைவர்எஸ். அழகராசா தெரிவித்தார். (உ-23)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கில்இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்தல் தொடர்பான கருத்தரங்கொன்று நாளைஞாயிற்றுக்கிழமை பிற்பகல்4 மணிக்கு தெல்லிப்பழை காசிப்பிள்ளை விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள தமிழர்விடுதலைக்கூட்டணிக் காரியாலயத்தில்நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ்மாவட்ட எம்.பி மாவைசேனாதிராசா கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார் இடம்பெயர்ந்தமக்கள் அனைவரையும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (வ)

# கேள்வி அறிவித்தல்

**கட்டடங்கள் திணைக்களம், வடக்கு - கிழக்கு மாகாணம் திருகோணமலை.**

01. யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள வடக்கு கிழக்கு மாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரியினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்குரிய கேள்விகள் 2002ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் திகதி பிற்பகல் 3 00மணி வரை இத் திணைக்களத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.

02. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தின் (ICT D) கட்டடம் நிர்மாணிப்பதற்குத் தரம் எம்- 7 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. யாழ்ப்பாண மாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரி அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா 750/- ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பொது 172 பற்றுச்சீட்டை யாழ்ப்பாண மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமிடத்து, 2002ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் திகதி அலுவலக நேரத்தில் பிற்பகல் 3. 00மணி வரை கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**வேலைகளின் விபரம்**

01. வட்டுக்கோட்டையில் மிருக வைத்தியர் காரியாலயம் நிர்மாணித்தல்.
02. கோப்பாயில் மிருக வைத்தியர் காரியாலயம் நிர்மாணித்தல்.

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு, ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப் படும்.

06 கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம். அத்துடன் ஏதும் மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாட்களில், அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**எந்திரி அ. வேல்மாணிக்கம்**
தலைவர்,
திணைக்கள கேள்விச் சபை.

பணிப்பாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம்,
வடக்கு- கிழக்கு மாகாணம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை.
திகதி. 03. 07. 2002. (C- 4623)

## இராசி பலன்

06-07-2002
(ஆனி 22 சனி)
ஏகாதசி பி·ப4 33வரை
பரணிகாலை 6.07வரை
இராகுகாலம் 10.27-11.57
நல்லநேரம் 5.57-6.27

**மேடம்**
காரியம்கைகூடும், தந்தை வழிஉறவு, புதியமுயற்சி தெய்வதரிசனம்

**இடபம்**
சுபசெலவு, காரியஅலைச்சல்,ஜனவசியம், நண்பர்கள் சந்திப்பு

**மிதுனம்**
நல்லநிகழ்வு, பிறர்உதவி தொழில்நன்மை, பெரியோர் மதிப்பு

**கடகம்**
எதிர்பாராத பிரச்சினை உடல்நலக்குறைவு, முயற்சி தாமதம்,பிரயாணம்

**சிங்கம்**
தொழில்நன்மை, தனவிரயம், மனக்கிலேசம், இனிய சம்பவம்

**கன்னி**
இனியசம்பவம், அந்நியர் உதவி, முயற்சிதாமதம் கெளரவக்குறைவு

**துலாம்**
மாதர்நட்பு, பணவிரயம் முயற்சிதாமதம், கெளரவக் குறைவு

**விருச்சிகம்**
வியாபாரநன்மை, பிரயாணக்கஷ்டம், குடும்பக்கவலை முயற்சிகைகூடும்

**தனுசு**
பகைவர்உறவு,லட்சுமிகரம் திடீர்நன்மை, சகோதரர் உதவி

**மகரம்**
இனியசம்பவம், கூட்டு முயற்சி, செல்வாக்கு, மனச் சஞ்சலம்

**கும்பம்**
சென்றஇடத்தில்சிறப்பு சயனசுகம், கற்பனைமிகுதி போசனசுகம்

**மீனம்**
சுபசெலவு, பொருள்விரயம் காரியதாமதம், தெய்வசிந்தை

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

## நிரந்தரக் கட்டடம் அமைக்க கோரிக்கை

(சுதுமலை)

நவாலி விவசாயிகள். சம்மேளனத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைத்துத் தருமாறு நவாலி விவசாயிகள் சம்மேளனத்தினர் யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் கே. சுந்தரேசனை கடிதம் மூலம் கேட்டுள்ளனர்.

மேற்படி சம்மேளனத்திற்கு நிரந்தரக் கட்டடம் கிடைக்குமெனில் பல அரிய சேவைகளை விவசாயிகளிற்கு வழங்க முடியும் என்று அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

(உ-252)

## கரும்புலிகள் தினம்

(கொழும்புத்துறை)

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில், கரும்புலிகள் தினம் தலைவர் டி. ஏ. எம். குணசிங்கம் தலைமையில் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

கரும்புலி மேஜர் செந்தாளனின் தாயார் கரும்புலி மில்லரின் படத்துக்கு விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து மாலை அணிவித்தல், அக வணக்கம் என்பன இடம்பெற்றன.

இந்நிகழ்விலே தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவினரும் பங்கு கொண்டனர்.

(உ-262)

## மூக்கூட்டுமா வந்துசேரவில்லை

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் உள்ளசிகிச்சை நிலையங்களிற்குகடந்தமாதம் தொடக்கம் திரிபோஷா மா கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படவில்லை.

கடந்த7 மாதங்களிற்குமேல் எதுவிததடையும்இன்றி யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு திரிபோஷாமா கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

(உ-252)
(உ-3)

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார்சைக்கிள்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த இளைஞர் இருவர் காயமடைந்தனர்.

நேற்று இடம்பெற்றஇந்தச் சம்பவத்தில் உடுவிலைச் சேர்ந்த நா. சுலக்சன்,(வயது 18), சி. சுகிதன் (வயது 19) ஆகியஇருவரும்காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த- 6)

## மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

(யாழ்ப்பாணம்)

மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசைத் தினமான எதிர்வரும் 13 ஆம் திகதி நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமூர்த்த ஆலயத்தில் அபிஷேகம், திருவாசக முற்றோதல், விசேடபூசை என்பன இடம்பெறவுள்ளன.

(ஷ)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி கோவில் அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 5. 45 மணிக்கு சமயப் பேருரைகளும் இடம்பெறவுள்ளன.

(ஷ)

# மிதிவெடிகள் அகற்றும் பணியில் ஒருமித்துச் செயற்பட வேண்டும்

## மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ். குடாநாட்டில் மிதிவெடிகள் செயலிழக்கும் பணியில் ஈடுபட்டுவரும் அனைத்து தரப்பினரும், பொதுமக்களின் நன்மைகருதி ஒருங்கிணைந்து செயற்பட முன்வரல்வேண்டும்.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம்நேற்றுமுன்தினம் யாழ். அரச செயலக கேட்போர்கூடத்தில் நடைபெற்ற மிதிவெடிகள் அகற்றும் திட்டத்தின் மீளாய்வுக் கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில்! பலாலி பாதுகாப்பு தலைமையகத்தில்இருந்து கேணல். ஆர். ஏ. கடுவெல, லெப்கேணல் டி. டி. யூ. கே. ஹெட்டியராட்சி, மேஜர். விஜயசுந்தர யூ. என். டி. பியின் முதன்மைத்தொழில்நுட்ப ஆலோசகர் அலெக்ஸ் வான் ரேய், யூ. என். டி. பி. யின் யாழ். தொழில்நுட்ப ஆலோசகர், ரிம்கோணர், பிரதேச செயலர்கள் மற்றும் சர்வதேச அரசசார்பற்றநிறுவனங்களின் பிரதிநிதிகளும் பங்குபற்றியிருந்தனர்.

யாழ். மாவட்டத்தில் தென்மராட்சி யாழ் நகரப் பகுதி மற்றும் ஆனையிறவு பிரதேசங்களில் பெரும் எண்ணிக்கையான மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றில் தென்மராட்சி, மற்றும் 'யாழ்ப்பாணப்பகுதிக்கு முன்னுரிமை வழங்கிச் செயல்படுவதாகவும் படைத்தரப்பில்தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இராணுவம் இதுவரை 238 சாதாரண மிதிவெடிகளையும் 2 இலட்சத்து 16 ஆயிரத்து 93 தனிநபர் எதிர்ப்பு மிதிவெடிகளையும் செயலிழக்கச் செய்வதுடன், 5 ஆயிரத்து15 வெடிபொருட்களை மீட்டதாகவும் தெரிவித்தனர். (உ-77,6)

## நெசவாளர்- பயிலுநர் ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் இயங்கும் யாழ்.மாவட்டபுடவைநெசவாளர் கூட்டுறவுச்சங்கஆலையில் வேலை செய்வதற்குபயிலுநர், வேலையாட்கள்சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

மின்தறியிலும், கைத்தறியிலும் வேலை செய்வதற்கு விருப்பமும் ஆர்வமும் உள்ளவர்கள் மேற்படி ஆலையில் முகாமையாளருடன், ஆலை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளும்படி மாவட்டஅலுவலர் பி. ராகவன் கேட்டுள்ளார். (ஷ)

## உதவிப் பணக்கொடுப்பனவு செவ்வாயன்று பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் 2001/2002 கல்வியாண்டில் கற்கை நெறிகளை மேற்கொள்ளும், உதவிப் பணக்கொடுப்பனவு பெறத் தகுதியான மாணவர்களுக்கான கொடுப்பனவு எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளை மூலம் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, கலைப்பீட மாணவர்களுக்கான கொடுப்பனவு எதிர்வரும் வெள்ளிக்கிழமை .12 ஆம் திகதியே வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## கால்நடைகளுக்கான நோய் ஆராய்ச்சி பிரிவு ஒகஸ்ட் முதல் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் கால்நடைநோய் ஆராய்ச்சிப் பிரிவு அலுவலகம் அடுத்த மாதமளவில் திறந்துவைக்கப்படவுள்ளது.

கால்நடைகளுக்கு ஏற்படும் புதுவித நோய்களைக் கண்டுபிடித்தலும், நோய்களை உடனுக்குடன் இனங்கண்டு ஏற்ற சிகிச்சைகளை அளித்தலும் மேற்படி பிரிவின் செயற்பாடுகளாக அமையும்.

குடாநாட்டில் கால்நடை நோய் ஆராய்ச்சிப்பிரிவு நீண்டகாலத்திற்குப் பின்னர் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஷ-19-2)

## மீளக்குடியமர்ந்துள்ள மாநகரசபை ஊழியர்கள் பணியில் இணையலாம்

(யாழ்ப்பாணம்)

1995 ஆம் ஆண்டு வன்னிக்கு இடம்பெயர்ந்து தற்போது குடாநாடு திரும்பியுள்ள, நிரந்தர நியமனம் பெற்ற யாழ். மாநகரசபை ஊழியர்கள் உடனடியாக கடமையில் இணையலாம் என யாழ். மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, மீளக்குடியமர்ந்துள்ள தற்காலிக ஊழியர்களை மீள இணைப்பது தொடர்பாக ஆராயப்படுவதாகவும் தெரியவருகிறது. (உ-6)

## வீடு வீடாகச் சென்று வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வீடு வீடாகச் சென்று வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மக்கள் வங்கி யாழ்.கிளை மேற்கொள்ளவுள்ளது.

பிரயாணம் செய்யமுடியாதவர்கள் வேலைப்பளுகாரணமாக வங்கிக்குச் செல்ல முடியாதவர்களின் நன்மை கருதியே இத்திட்டம் அமுல் படுத்தப்படவுள்ளது.

தவிரவும் பெற் காட் முறையை மக்கள் மத்தியில் அறிமுகம் செய்தல் மற்றும்வைப்பினை மீளப் பெறுவதற்கு முத்திரைத் தீர்வை இல்லை என்பன தொடர்பாக மக்களிடம்நேரில்சென்றுவிளக்கமளிக்கவும்மக்கள் வங்கியின் யாழ்-கிளைதிட்டமிட்டுள்ளது.

இதேவேளை, 1984 ஆம் ஆண்டிற்குமுன்னர், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் மக்கள் வங்கிக் கிளைகளில்அடகு வைக்கப்பட்டு மீட்கத்தவறிய நகைகள் வவுனியாவிலும், யாழ்ப்பாணத்திலும் விரைவில் ஏலத்தில் விடப்படவிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-21)

## கும்பாபிஷேகம்

(காரைநகர்)

காரைநகர் பத்தர் கேணி அருள்மிகு வன்மீக விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஷ 246)

## விமானப் பயணியின் 50 ஆயிரம் ரூபா அபேஸ்

(உடுவில்)

இரத்மலானையிலிருந்து பலாலிக்கு விமானம் மூலம் பயணம் செய்த பயணி ஒருவரின்பெருந்தொகைப் பணம் களவாடப்பட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி வியாழக்கிழமைஇச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. நோர்வேயிலிருந்து வந்த மேற்படி நபர் தனது பணத்தினை பொதிகளுடன் சேர்த்து இரத்மலானையில் கையளித்ததாகவும் பின்னர் பலாலியில் வந்து அதனை பொறுப்பேற்றபின் பார்த்தபோது அதனுள்ளிருந்த 50 ஆயிரம் ரூபா பணம் காணாமல் போய் விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஷ-261)

## விலங்கு வேளாண்மை விருத்தியடைகிறது

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையத்திற்கு பொலநறுவையிலிருந்து புதிதாக இரண்டு 'ஜேர்சி' இன காளை மாடுகள் தரைவழிப்பாதையூடாக அண்மையில் எடுத்து வரப்பட்டுள்ளன.

குடா நாட்டில் விலங்கு வேளாண்மையை அபிவிருத்தி செய்யும்பொருட்டு அண்மையில் 3 கடாக்களும் 2காளை மாடுகளும் பொலநறுவையிலிருந்து கொண்டுவரப் பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-19)

## கோழிகளில் நோய்த் தாக்கம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் கோழிகளில் கம்பறோ, ரணிக்கட் ஆகிய நோய்கள் அவதானிக்கப்படுவதாக கால்நடை அத்தியட்சகர் எம். தங்கராஜா தெரிவித்துள்ளார்.

இதேவேளை அண்மைக் காலத்தில் தென்னிலங்கையிலிருந்து கோழிக்குஞ்சுகள் கட்டுப்பாடற்ற முறையில் குடாநாட்டில் தருவிக்கப்படுவதனால் புதிதாக நோய்கள் பரவும் சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும்-

எனவே கோழிகளில் நோய்கள் அவதானிக்கப்பட்டால் உடனடியாக வைத்தியம் செய்துகொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஷ-19)

# செய்தித் துளிகள்

## ஜி. ரி. சற் உதவி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக்கு, அண்மையில் விஜயம் மேற்கொண்ட ஜி.ரி சற் அதிகாரிகள் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு விளையாட்டுப் பொருட்கள்' சீருடைத்துணி, மற்றும் உணவுப் பொருட்களை வழங்கியுள்ளனர்.

மேலும் மாதர்சங்கத்திற்கு தையல் இயந்திரம் ஒன்றையும் அவர்கள் கையளித்தனர்.

இதனால் ஆறு ஆரம்பப் பாடசாலைகள்பயன் அடைந்துள்ளன. (ஷ)

## புலமைப் பரிசில் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு றோட்டறிக் கழகம், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 10 வறிய பல்கலைக் கழக மாணவர்களுக்கு புலமைப் பரிசிலை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இந்த புலமைப் பரிசிலை பெறும் பொருட்டு மாணவர்கள் நலச்சேவை உதவிப் பதிவாளரிடம் தொடர்பு கொள்ளுமாறு மட்டக்களப்பு மாணவர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (உ-6)

## மல்லிகைச் சிறுகதைகள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மல்லிகைச் சிறுகதைத் தொகுதி குறித்த கலந்துரையாடலும் நூல் வழங்கலும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு பிறவுண் வீதி, நீராவியடியிலுள்ள யாழ். இலக்கிய வட்டத் தலைவர் செங்கை ஆழியானின் இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இத்தொகுதியில் இன்று வாழ்ந்து வரும் வரதர், நந்தி, செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், தெணியான், க. சட்டநாதன், சாந்தன், கோகிலா மகேந்திரன், ஜே. ஆர். டேவிட் ஆகியோரின் கதைகளும் அடங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஷ)

## விளையாட்டு மைதானத்திற்கு காணி கொள்வனவு

(காரைநகர்)

காரைநகர் சைவ வித்தியாசாலை விளையாட்டு மைதானத்திற்கென பழைய மாணவர்களால் காணி ஒன்று ஒரு இலட்ச ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் 120 வருடங்களாக விளையாட்டு மைதானம் இல்லை என்ற இப்பாடசாலையின் குறை நீங்கியுள்ளதாகவும், இம்முறைவருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இம்மைதானத்திலேயே நடைபெறும் என்றும் வித்தியாலய அதிபர் ஆ. குமரேசமூர்த்தி தெரிவித்தார். (ஷ-246)

## முன்பள்ளிகள் இயங்குகின்றன

(மந்திகை)

இடம்பெயர்ந்து கரவெட்டியில் இயங்கிவந்த புலோப்பளைகிழக்கு முன்பள்ளி மீண்டும் சொந்த இடத்தில் கடந்த முதலாம் திகதி முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

முன்பள்ளி நிலையத்தினை பச்சிலை பள்ளி பிரதேச செயலர் புத்திசிகாமணி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

அதேவேளை வல்வெட்டித் துறையில் இயங்கி வந்த வண்ணாங்கேணி வடக்கு முன்பள்ளி நிலையம் கடந்தபுதன் கிழமை முதல் இயங்க ஆரம்பித்துள்ளது. (உ-23)

## கடந்த மாதம் 24.5 மில்லி மீற்றர் மழை பதிவு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்களத்தில் கடந்த மாதம் பதிவாகியுள்ள வானிலைத் தரவுகள் வருமாறு;

9,10 ஆம் திகதிகளில் முறையே அதி உயர் வெப்பமாக 34.9 பாகை செல்சியஸும் குறைந்த வெப்பமாக 23. 01 பாகைசெல்சியஸும் பதிவாகியுள்ளன.

சராசரி வெப்பநிலை 30.1 பாகை செல்சியஸும், மொத்த மழைவீழ்ச்சியாக 24.5 மில்லிமீற்றரும் பதிவாகியுள்ளது. (உ-19)

## 12 ஆம் திகதிவரை விளக்க மறியல்

(கொழும்பு)

கடந்த வருடம் யூலை 23 ஆம் திகதி கட்டுநாயக்கா விமான நிலையத்தாக்குதல் தொடர்பாக பயங்கர வாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப் பட்டிருந்த 13 தமிழ்க் கைதிகளையும் எதிர்வரும் ஒகஸ்ட் 12 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நீர் கொழும்பு மேல் நீதிமன்றில் நடந்தஇவ்விசாரணையில் நீர் கொழும்புநீதிவான் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார். (உ-5)

## பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் பொதுகூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10. 00 மணிக்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் சி.அ. சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி கலந்து கொள்ளவுள்ளார். (ஷ)

## விபத்தில் இராணுவவீரர் காயம்

(உடுவில்)

பயணிகளை ஏற்றிவந்த ஹைஏர்ஸ் வாகனத்துடன் இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் அதனை ஓட்டி வந்த இராணுவவீரர் காலில் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த சனிக் கிழமை சாவகச்சேரி நகரப் பகுதியில் இடம்பெற்றது.

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள், பயணிகள் வாகனத்தின் பம்பர் பகுதியில் மோதிய போதிலும் வாகனச் சாரதியின் சாதுரியத்தால் உயிர்ச் சேதமேதும் ஏற்படவில்லை. (ஷ-261)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் இன்று முற்பகல் 10.00 மணிக்கு சார்லி சப்ளின் இயக்கி நடித்த The Great Dictator எனும் திரைப்படம் புவியியல்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் இதில் கலந்து பயன்பெறலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஷ)

# உரைசால் பத்தினிக்கு உயர்வு கொடுக்கும் இளங்கோ தந்தகாப்பியமே "சிலப்பதிகாரம்"

இலக்கியங்கள் பெண்களை காலத்துக்கு காலம் வெவ்வேறு பிரிவினராகப் பிரித்துஅவ்வக் காலத்துக்கு ஏற்பக் காட்டுவது மரபு. நூலின் தொடக்கம் முதல் தொல்காப்பிய அடியொற்றி மகளிரின் இயல்பான குணங்களை, ''பெண்பாலவர்கட்கணியாய்ப் பிரியாத நாணும் திண்பால் நிறையும் திருமாமையும் சேர்ந்த சாயல் கண்பால் கவினதும்'' (1969)

என்று கூறும் சிந்தாமணி ஆசிரியர், மகளிரைக் கன்னியர் என்றும், கற்புடை மகளிரென்றும், விலை மகளிரென்றும் மூவகையினராகப் பிரித்து அவ்வவர்களுக்குரிய சிறப்பியல்புகள், மனப்பாங்கு, ஒழுகலாறு முதலியவற்றை விரிவாகத் தமது நூலிற் கூறிச்செல்வர்.

இதே போன்று சிலப்பதிகார ஆசி ரியரான இளங்கோவடிகள் மகளிரைப் பத்தினிப்பெண்டிர், கற்புடை மகளிர், கணிகை மாதர் என முத்திறத்தினராகப் பிரிக்கின்றார். இதிலிருந்து சிலப்பதிகார காலத்திலும் அல்லது அதற்கு முற்பட்ட காலத்திலுமே பத்தினிப் பெண்டிர் வாழ்ந்தனர் என்று கொள்ளக்கிடக்கின்றது. சிலப்பதிகாரத்தில் கண்ணகியாலும், பிற பாத்திரங்களாலும் சுட்டப்படும் பத்தினிப் பெண்டிர்கள் அனைவரும் அவர்களது சமகாலத்ததிலன்றி அவர்கள காலத்துக்கு முன் வாழ்ந்தவாகளாவர். இத் தகைய பத்தினிப் பெண்டிர்கள் வாழ்ந்தமை பற்றியும் அவர்களின் விழுமியச் சிறப்பியல்புகள் பற்றியும் புராண இலக்கியங்களே எடுத்து இயம்புகின்றன. இப்பத்தினிப் பெண்களைப்

'பதிவிரதை' கள் எனவும் நூல்கள் கூறும். அதாவது கணவனையே 'பதி'யாகக் கொள்பவர்கள. பிறரை பதியரக மனத்தாலும் கொள்ளாதவர்கள், விலை மகளிர் அல்லது கணிகை மாதரைப் 'பதியிலார்' எனச் சுட்டுவர். இந்த இரு பிரிவினருக்கு மிடைப்பட்டவர்களே 'கற்புடை மகளிர்' ஆவர்.

தெய்வமகளான கண்ணகியை இரண்டு படிகள் இறக்கி, சாதாரண மகளிருள்ஒரவராகக் காட்டுவதும் கற்புடைமகள் என்றும் அறிய கற்புடையவள் சீரய கற்புடையள் என்றும் கற்புடைய மகளிரோடு ஒப்பிட்டும் சிலப்பதிகாரம் பற்றிப் பேசுபவர்களும் எழுதுபவர்களும் மதிப்பீடு செய்வது கண்ணகிக்கு இயல்பாய் அமைந்த குணங்களையும் அவளது தெய்வகத்தன்மைகளையும் நூலாசிரியரின் உன்னத நோக்கத்தையும் பாதிப்படையச் செய்வதாகும்.

## உரைசால் பத்தினிக்குயர்ந்தோ ரேத்தல்

உரைசால் பத்தினிக்குயர்ந்தோரேத்துதல் உரைசால் பத்தினிக் குயர்ந்தோரேத்தலும் என்பதில் உள்ள ''உயர்ந்தோர்'' என்பது தண்டமிழ் வல்ல சாத்தனும் உரை சால் அடிகளான இளங்கோவடிளும் முடியுடை மன்னர்களும் இவர்கள் போன்றோர் மட்டும் அல்லர். இவர்கள் அனைவரும் மக்கள் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களேயாவர். கண்ணகிதேவர்களாலும் புகழப்படத்தக்க விழுமிய சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டவள். இவ் விதசிறப்பியல்புகளை இயல்பாகக் கொண்டவளாதலாலும் மக்களோடு தேவர்களும் ''மக்கள் தேவர்'' உயர் திணையென்பதாலுமே உயர்ந்தோரேத்தலும் என்று பாடலாயினார்.

பத்தினிப் பெண்டிர் அதாவது பதி விரதைகள் கணவனைப் 'பதி'யாக வழிபடுவது போன்று அக்காலத்தில் ஆடவர்களுள்ளும் சிவனையே 'பதி' யாக வழிபடும் மரபு இருந்ததாகப் புராண இலக்கியங்கள் கூறுகின்றன. இந்த ஆடவர்கள் இரு பாலாருக்கும் வழிகாட்டிகளாயமைந்தனர். பத்தினிப் பெண்கள் போலத் தன்னலமற்ற அளவு கடந்த பத்தி அல்லது பத்திமையைப் 'பதி' மேற்கொண்டதால் இவர்கள் ப(க்)த்தன் பத்திமான் என அழைக்கப்படலாயினர். பத்தி என்பது தொண்டு அல்லது அன்பு எனப்படும் திரு.திரிகூட சுந்தரம் போன்றோர் கூறும் ஆண்டான் அடிமை என்ற விவாதம் இங்கு பொருந்தாது. அடிமை, தான் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சிலவற்றையோ முழுவதையுமோ ஆண்டானுக்குச் செய்தேயாக வேண்டும் தொண்டு அவ்வாறற்றது: அது தன்னலங் கருதாதது: விழுமிய அன்புள்ளங் கொண்டு செய்வது, அதனாலேயே அத்தகைய அன்புள்ளங் கொண்ட பெண்களையே 'பத்தினிப் பெண்டிர்' எனலாயினர்.

பத்திமான்கள் 'பதி'யைப் பத்தியாலேத்திநின்று பணிபவர்' என்பார் நாவுக்கரசர். நின்று பணிபவர் என்பது நின்று பணிவிடை செய்பவர் என்றும், இவர் நெஞ்சத்துள்ளார். அதிகைவீரட்டானத்தாரே' இவரது மனத்திலுள்ளே இருப்பவர் திருவதிகை வீரட்டானத்துச் 'சிவனே'யன்றி பிறிதொருவரிலர் என்பது போதரும்.

**வ.கோவிந்தபிள்ளை.**
ஓய்வு பெற்ற உதவிப்பதிவாளர்
(யாழ் பல்கலைக் கழகம்)

இதனாலேயே 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே' என ஔவையார் கூறுவர். இதே போன்று பத்தினிப் பெண்டிர்களது பெருமையும் சிறப்புகளும் சாதாரணமானுடரால் இத்தகையதெனச் சொல்வதற்கு அடங்காதது.

## பத்தினிப் பெண்டிரின் அழகினைத் தேவமகளிரும் புகழ்தல்

கற்புடைய மகளிரும் ஏனைய மகளிரும் செயற்கைப் பொருட்களாலேயே தம்மை அழகுபடுத்திக்கொள்வதுண்டு. இவர்களுக்கு இயற்கை அழகு இல்லை என்பதே நக்கிரர் முதல் ரி.எஸ்.எலியட் (T.S.Eliot) வரையுள்ள அறிஞர் பலரது கருத்துமாகும். இதனாலேயே பட்டர் அம்பிகையை மட்டும். 'அழகுக் கொருவருமொவ்வாத வல்லி' என்று பாராட்டுவதைக் காண்கிறோம். இதேபோன்று தெய்வத்தன்மை பொருந்திய பத்தினிப் பெண்ணான கண்ணகியிடம் இயற்கையழகு நிறைந்திருந்தது. இதனைப் புகார் நகர மக்கள பாராட்டுவதாக ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுவர். ஆனால் அவர்கள் எவ்வாறு பாராட்டுகின்றார்கள் என்பதே முக்கியமானதும் சிந்தனைக்கு விருந்தளிப்பதுமாகும்.

'அவளுந்தான்,
போதிலார் திருவினாள் புகழுடை வடிவு, என்றும் தீதிலா வடமீனின் திறம் இவள் திறம்: என்றும் மாதரார் தொழுதேத்த, வயங்கிய பெருங்குணத்துக் காதலாள் பெயர் மன்னும் கண்ணகி என்பாள்'.

அதாவது கண்ணகி சிறுவயதிலேயே நிலையான புகழுடையவளாகவிளங்கினாள் அவளுடைய பெயர் நிலைப்பதற்கு உரிய காரணங்கள் மூன்றினை ஆசிரியர் இங்கு எடுத்துக்காட்டுகிறார். அவற்றுள் முதலாவது வருமாறு:

## ''போதிலார் திருவினாள் புகழ் உடைய வடிவு''

இவ்அடியில் உள்ள போது என்பது பூ வென்பதையே குறிக்கும். போது என்பதும் பூவென்பதும் ஒன்றே. பூ எனப்படுவது பொறிவாழ் பூவே. ஆதலால் போதிலார் திருவினாள் என்பது தாமரை மகாராசனியாகிய இலக்குமியையே குறிக்கும். இலக்குமி அழகுடையவள் அத்தகைய அளகுடையவளால் புகழப்படத்தக்க வடிவுடையவளாகத் திகழ்ந்தாள் கண்ணகி என்தே இவவடிக்குப் பொருளாகும் நூலாசிரியரைப பின்பற்றாது உரையாசிரியர்களை பின்பற்றி பலரும் பல இடர்ப்பாடுகளுள் மூழ்கியதை அவ்வவர்களுடைய கூட்டுரைகளையும் நூல்களையும் படிக்கும் போது தெளிவாகின்றது இந்த அடிக்கு டாக்டர் சிங்காரவேலனார் கூறும் நீண்ட விளக்கங்கள் நூலாசிரியரோடு ஓட்டிச் செல்லாததால் ஏற்புடைய்தாகத் தெரியவில்லை. ஏனெனில் மக்களுள் ஒருவர், ஒருவரை அழகுடையவள் என்று கூறிப்புகழ்வதை மற்றவர் எற்கமாட்டார், ஏற்க வேண்டும் என்ற நியதியும் இல்லை.

ஒரு சிறந்த மாணவனை முதலில் அவனுடைய ஆசிரியர் புகழவேண்டும். அதன் பின்னரே ஏனையோர் கூறுவது ஏற்றுக் கொள்ளப்படும் என்று லோட் செஸ்றர் பீல்ட் என்பவர் கூறியுள்ளது நோக்குதற்குரியது.

எனவே புகார் நகரப் பெண்கள், கண்ணகி இலக்குமி போன்ற வடிவுடையவள் என்று கூறுவதாக டாக்டர் சொல்வது ஏற்புடையதாகாது. தெய்வத்தன்மை பொருந்திய கண்ணகிக்குச் சிறப்புமாகாது. இரண்டாவதாக ஆசிரியர் கூறுவதும் சிந்தனைக்குரியதே.

## ''என்றும் தீதிலா வட மீனின் திறம் இவள் திறம்.

இதில் என்றும் என்பதை விலக்கி, வறிதே தீதிலா வடமீனின் திறம் இவள் திறம் எனில் தீதுள்ள வடமீனும் உண்டு என்ற தொனிப் பொருளும் ஏற்பட இடமுண்டாகிறது. என்றும் தீதிலா வட மீனின் திறம் என்றும் கூறும் பொழுது எக்காலத்தும் குற்றமற்றவளாகவே விளங்கினாள் அருந்ததி என்ற தெளிவு பிறக்கின்றது. அதாவது சிவமூர்த்தியானவர் முன்பு பால வேடம் தரித்து எழுந்தருளியகாலத்தும் நிலை கலங்காத பதிவிரத்தயாகவே இருந்தாள் அருந்ததி. திகம்பரராக தாருகா வனத்தையடைந்த காலத்தும் நிலை கலங்காத வளாகவே இருந்தாள் என்பர். இவ்வாறு கண்ணகியை 'என்றும் தீதிலா வடமீனின் திறம் இவள் திறம் என்று கூறுவதிலிருந்து, கண்ணகி திருமணத்திற்கு முன்னரும் சரி திருமணத்திற்குப் பின்னரும் சரி நிலைகலங்கமாட்டாள்: கலங்காதவள் என்பதைத் தெளிவுற எடுத்துக் காட்டவே அவ்வாறு ஆசிரியர் கூறலாயினார்.

''அருந்ததி வசிட்ட முனிவர் பத்தினி, கண்ணகிக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை அப்படியிருக்க ஊரார் அவளை அருந்ததி போன்ற கற்புடையவள் என்று புகழ்வதாகக் கூறுவது எவ்வாறு பொருந்தும் என்று தோன்றவில்லை என்றும் இன்னோரன்ன வேறு வகைகளிலும் திரு.திரிகூடசுந்தரம் போன்றோர் விவாதிப்பதும் ஏற்புடையதாகத் தெரியவில்லை.

## கற்புடைய மகளிரின் நிலை.

கற்புடைய மகளிரின் நிலை பத்தினிப் பெண்டிரின் நிலைக்கு முற்றும் மாறுபட்ட நிலையாகும். சீதை திருமணமாவதற்கு முன்பு ஒரு முறை மட்டுமே வீதியில் சென்ற இராமனைக் கண்டவள் அப்படியிருந்தும், இராமனேவில்லை முறித்தவன் என்பது தெரிந்தும் சீதை நிறை கலங்கினாள், நிலை குலைநதாள், இதனைக்

''கோமுனியுடன்வரு கொண்ட லென்றபின்
தாமரைக் கண்ணினானென்ற தன்மையால்
ஆமவனே கொலென்றையம் நீங்கினாள்
வாமமே கலையிற வளர்ந்த தல்குலே''
(கம்பராமாயணத்தில்
மிதிலைக் காட்சிப் படலம்)

எனக் கம்பர் கூறுவார். திருமணமான பின்பு சீதையின் ஆபரணங்களைக் கண்டமாத்திரத்தே இராமன் பட்ட அவஸ்தைகளையும் அவன் பிதற்றிய பிதற்றுரைகளையும் கம்பரால் மட்டுமே கூறலாமேயன்றி ஏனையோரால் முடியாது.

புத்திரரான கவுச்சகர் திருமணம் செய்ய மறுத்தபோது தந்தையாகிய குச்சகர்,

''ஆடக வனப்புடை யருந்ததியை
நீங்கான் மாறுற விருத்தியும் வசிட்டமுனி
என்போன் நீடுதவ நோன்மைகொடு
நின்றனன தன்றிப பீடுகெழு ஞாலமிசை
பெற்பழி யுண்டோ.
(கந்தபுரணம்-மார்க்கண்டேயப்படலம்)

என்று வசிட்டரையும் பதிவிரதையான அருந்ததியையும் உதாரணமாகக் காட்டி மகனைத்திருமணத்திற்கு ஒருப்படச் செய்தது நோக்கற்பாலதே இதில் ஒவ்வொரு வரியும் சிந்தனைக்குரியதேயாகும்.

இனி மூன்றாவது விடயத்திற்கு வருவோம்

## ''என்றும் மாதரார் தொழுதேத்த''

இந்த அடியில் மூன்று சம்பவங்கள் நிகழ்கின்றன. ஒன்று புகார் நகரப் பெண்கள் அவளை வணங்குகிறார்கள், இரண்டு புகழ்கின்றார்கள்: மூன்று எப்போதும் அதாவது முப்போதும் சென்று இவ்வாறாகிய செயலைச் செய்கின்றார்கள். சாதாரண ஒரு சிறுமியாகிய அவளை புகார் நகர மக்கள் சென்று வணங்குவதும் புகழ்வதும் என்பது கேலிக்கிடமாகிவிடும். அனால் இலக்குமியே புகழுகின்ற அவளுடைய தெய்வத்தன்மை பொருந்திய அழகினையும் மாறு பாடற்ற உன்னத தெய்வீக குணங்களையும் இயல்புகளையும் பெண்கள்காணும் போதும் கேட்கும்போதும் அவளை முப்போதும் சென்று வணங்காது அல்லது புகழாது போக அவர்களால் முடியவில்லை என்பதே யாகும்.

இவ்வளவும் நிகழ்ந்த போதும் கண்ணகியோ விருப்பு வெறுப்பற்றவளாகி-சலனமற்றவளாகி ''வயங்கிய பெருங்குணத்துக் காதலாள்'' விளங்கும் உயர் குணத்திலேயே கருத்துடையவளானாள்.

இவ்வாறு பத்தினிப் பெண்ணாகிய கண்ணகி கற்புடைய மகளிருக்கு மட்டுமன்றி ஏனைய மகளிருக்கும ஊன்று கோலாகவும் வழிகாட்டியாகவும் விளங்கியதை சிலப்பதிகாரம் நன்கு தெளிவுறக் காட்டுகின்றது. எனவே இவற்றைச் சிலப்பதிகாரததைக்கற்கும் ஒவ்வொரு பெண்ணும் மனங் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

# நிவாரணப் பொருட்களின் விலை நிர்ணயமும் சேவைக் கட்டண அதிகரிப்பு கோரிக்கையும்

(யாழ்ப்பாணம்)

நிவாரணத்துக்கு வழங்கப்படும் பொருட்களின் விலையை நிர்ணயம் செய்து தருமாறும், பொருட் பரிமாற்ற சேவைக்கட்டணத்தை அதிகரித்துத் தருமாறும் கோரி யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை, யாழ் அரச அதிபர் கே. சண்முகநாதனுக்கு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிவாரணப் பொருட்களின் விநியோகத்திற்கு செயலக களஞ்சியத்தில் இருந்து பொருட்களை சங்கக் களஞ்சியத்திற்கு கொண்டு வருதல், பின்னர் கிளை நிலையங்களுக்கு பங்கீடு செய்து மீண்டும் விநியோகத்தின் பொருட்டு கிளை நிலையங்களுக்கு ஏற்றிப்பறித்தல், சனத்தொகை குறைந்த தொலைவில் உள்ள கிளை நிலையங்களாயினும் மக்களது நன்மை கருதி அவ்வக் கிளைகளுக்கு பொருட்களை அனுப்பிவைத்தல் போன்ற போக்குவரத்து செலவீனங்களின் அதிகரிப்பும்.

மொத்த கிளை நிலையங்களில் விநியோகிக்கும் பொருட்டு பயன்படுத்தப்படும் மனித சக்தி செலவீன அதிகரிப்பும், தொடர்புபட்ட கணக்கு வைத்தல் ஏனையவற்றிற்கான காகிதாதி செலவீனங்கள் என்பவற்றைக் கணக்கிடும் போது சங்கங்களின் இச் சேவைக்கு செயலகத்தால் வழங்கப்படும் சேவைக்கட்டணம் (கிலோவுக்கு 1.50சதம்) தற்போதைய எரிபொருள் விலை அதிகரிப்பு, சம்பள அதிகரிப்பு காரணமாக குறித்த செலவீனங்களை சங்கங்களால் ஈடு செய்ய முடியாமல் உள்ள நிலைமையை சுட்டிக்காட்டி சங்கங்களுக்கான சேவைக் கட்டணத்தை அதிகரித்துத் தரவேண்டும்.

### சேவைக் கட்டணத்தை பணமாக வழங்கக்கோருதல்

செயலகத்தால் வழங்கப்படும் நிவாரணப் பொருட்களுக்கான விலைகள் தற்போதைய சந்தை விலைகளுடன் ஒப்பிடும் போது அதிகரித்துக் காணப்படும் நிலை பற்றி கலந்துரையாடப்பட்ட விலை விபரங்கள் கீழே அட்ட வணையில் காட்டப்பட்டுள்ளது:

மேற்படி பொருட்களின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றமையால் சேவைக் கட்டணத்துக்கான பொருட்களின் விலையை குறைத்தே விற்பனை செய்யும் நிலை சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ளது இதன் காரணமாக ஏற்கனவே செலவீனங்களை ஈடு செய்ய முடியாத நிலையில் ரூபா 1.50 சதம் கூட சேவைக்கட்டணமாக கிடைக்காத நிலையில் சங்கம் மேலதிக நட்டத்தையும் அடைய வேண்டிய நிலை ஏற்படுகின்றமையால் குறித்த சேவைக்கட்டணத்தை பொருட்களாக அன்றி பணமாகத் தரவேண்டும்.

### நிவாரணப் பொருட்களின் விலை நிர்ணயம்

நிவாரணப் பொருட்களின் விலை சந்தை விலையை விட அதிகரித்துக் காணப்படுவதால் நிவாரணப் பொருட்களின் விலையை சந்தை விலைக்கேற்ப குறைத்து நிர்ணயம் செய்வதன் மூலம் நிவாரணம் பெறும் மக்கள் நன்மையடைவார்கள் என்பதோடு அது நியாயமானதாகவும் அமையும் என்பதை கருத்தில் கொண்டு நிவாரணப் பொருட்களின் விலையை சந்தை விலைக்கு ஏற்ப நிர்ணயம் செய்துதருமாறு கோருகிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

| பொருள் | சந்தைவிலை | நிவாரணவிலை |
|---|---|---|
| 1) சிவப்பு நாட்டரிசி | 31.00 | 37.50 |
| 2) சிவப்புப் பச்சை அரிச | 32.00 | 32.50 |
| 3) சீனி | 32.00 | 36.50 |
| 4) மைசூர்ப்பருப்பு | 30.00 | 56.50 |

# இன்று ஒரு தகவல்

## வாழும் முறை உண்டு

'நல்லதுக்கு இது காலமில்லை சார்' என்று சொல்லி அலுத்துக்கொண்டார் ஒருவர். 'ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்' என்று கேட்டார் இன்னொருவர். 'நாம் பணிவாக நடந்துகொண்டால், அதை மற்றவர்கள் நம்முடைய பலவீனமாக நினைத்துவிடுகிறார்கள் சார். நடைமுறையில் அது மிகவும் கஷ்டமாக இருக்கிறது' என்றார் இவர். இவர் இப்படிச் சொல்வதிலே ஒன்றும் தப்பு இல்லை. உங்களில் பலருக்குக் கூட அப்படிப்பட்ட அனுபவங்கள் இருக்கலாம். சரி! அப்படியென்றால் இந்த உலகத்தில் நாம் எப்படி நடந்து கொள்வது?

இந்தக் கேள்விக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் என்னபதில் சொல்கிறார் என்று பார்க்கலாம். அவர் சொல்லியிருக்கிற ஒரு கதையைக் கேளுங்கள். அதில் இதற்குப் பதில் இருக்கிறது. 'ஒருநாள் ஒரு பிரமச்சாரி ஒரு புல்வெளி வழியாக நடந்துபோய்க் கொண்டிருந்தார். அவரைப் பார்த்ததும் அங்கே மாடு மேய்த்துக் கொண்டிருந்த சின்னப் பையன்கள் சிலர் ஓடிவந்தார்கள். 'சுவாமி! அந்தப் பக்கம் போகாதீர்கள். அங்கே ஒரு விஷப்பாம்பு இருக்கிறது. போகிறவர்கள், வருகிறவர்களைக் கடித்துவிடும்' என்றார்கள்.

'பாம்புதானே! பரவாயில்லை! எனக்குச் சில மந்திரங்கள் தெரியும். அதனால் பயமில்லை' என்று சொல்லிவிட்டு அவர் தன்பாட்டில் நேராகப் போனார். 'இவர் என்ன? ஆபத்தை விலைகொடுத்து வாங்குகிற ஆளாக இருக்கிறாரே' என்று நினைத்துக் கொண்டு, அந்தப் பையன்கள் தூரத்தில் நின்றுவிட்டார்கள். இவர்மட்டும் போய்க்கொண்டேயிருந்தார். கொஞ்சத்தூரம் போயிருப்பார். அந்தப்பாம்பு இவரைப் பார்த்து விட்டுச் சீறிக் கொண்டு கிட்டவந்து படம் எடுத்தது. அதைப் பார்த்தவுடன் இவர் ஒரு மந்திரத்தைச் சொன்னார். அவ்வளவுதான்! இந்த மந்திரத்தின் மகிமை. பாம்பிடம் இருந்த கெட்டகுணங்கள் முழுவதும் போய்விட்டது. அது ஒரு மண்புழு மாதிரி இவர் காலடியில் வந்து படுத்துக் கொண்டது. இவர் அதற்கு உபதேசம் பண்ணி

எறிவது. குச்சியை எடுத்து வீசுவது. எல்லாத்துன்பத்தையும் அந்தப் பாம்பு பொறுமையாகச் சகித்துக் கொண்டது. அதற்கு இப்போது கோபமே வருவதில்லை. ஒருபையனுக்கு இதைப் பார்த்ததும் சும்மா இருக்கமுடியவில்லை. கிட்டப்போனான். அந்தப் பாம்பின் வாலைப் பிடித்துத் தூக்கினான், கரகர என்று தலைக்குமேலே சுற்றினான், ஓங்கித் தரையில் வீசினான், அந்தப் பாம்பு மூர்ச்சையாய் விட்டது. சரி... அவ்வளவுதான் ஆட்டம் குளோஸ் என்று நினைத்துக் கொண்டு அந்தப் பையன்கள் போய் விட்டார்கள்.

அந்தப்பாம்பு மிகவும் சிரமப்பட்டு வளைக்குள்ளே போய்விட்டது. பகலில் வெளியில் வருவதே இல்லை. இலை. சருகு-தானாக விழுகிற பழங்கள் ஆகியவற்றைச் சாப்பிட்டுக் காலந்தள்ளிக் கொண்டிருந்தது. பாம்பு மிகவும் மெலிந்து போய்விட்டது. எலும்புந்தோலுமாக ஆகிவிட்டது.

இருந்தாலும் மற்றவர்களுக்கு எந்தக் கெடுதலும் செய்வதில்லை. இப்படியே வாழ்ந்து கொண்டிருந்தது. ஒரு வருடத்தின் பின்னர் அந்தப் பெரியவர் மறுபடியும் அந்த வழியாக வந்தார். பாம்பைப் பார்த்தார். 'என்ன சௌக்கியமா? என்றார்'' ஏதோ உங்கள் புண்ணியத்தில் மிகவும் சௌக்கியமாக இருக்கிறேன் என்றது பாம்பு. என்ன இப்படி ஒரேயடியாக மெலிந்து போய்விட்டாய்?' என்றார். இப்போது இலை-பழம்மட்டும் தானே சாப்பிடுகிறேன். அதனால் அப்படி இருக்கலாம் என்றது.

'பையன்கள் உனக்குத் தொந்தரவு செய்யவில்லையா? என்று கேட்டார். 'அறியாத பிள்ளைகள்! ஏதோ தெரியாத்தனமாக அப்படிச் செய்துவிட்டார்கள்' என்றது. பாம்புக்கு அந்த அளவுக்குப் பக்குவம் வந்துவிட்டது. அப்போதுதான் அந்தப் பெரியவர் சொல்கிறார். 'யாரையும் கடிக்க வேண்டாம் என்றுதானே உன்னிடம் சொன்னேன். சீறிப்பயமுறுத்த வேண்டாமென்று சொல்லவில்லையே. 'யாராவது தொந்தரவு பண்ணவந்தால் அவர்களைச் சீறி நீஉன்னைப் பாதுகாத்துக் கொள்ளவேண்

### வேகமாகப் பரவிவரும் எயிட்ஸ்

# ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் 6.6 மில்லியன் பேர் பாதிப்பு

(கொழும்பு)

ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் கடந்த ஆண்டின் இறுதியில் 6.6. மில்லியன் பேர் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டிருப்பது குறித்து ஐ.நாவின் அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்காவின் சகாராப் பகுதி நாடுகளில் 28.5 மில்லியன் மக்கள் எயிட்ஸினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும்' அதற்குஅடுத்தபெரியதொகை நோயாளிகள் ஆசிய பசுபிக் பிராந்தியத்தவரே என்றும் யூ.என்.எயிட்ஸ் திட்ட அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

சீனாவில் 1996இல்எயிட்ஸ் நோயாளிகள் ஒருசத வீதம் கூட இருக்கவில்லை. ஆனால் 2000ஆம் ஆண்டில் 11 சத வீதம்பேர் இனம் காணப்பட்டுள்ளனர். 2001இல் எச். ஐ.வீ தொற்று வீதம் மேலும் அதிகரித்து 8இலட்சத்து50ஆயிரம் சீனர்கள் இப்போது எயிட்ஸ் நோயாளிகளாகவுள்ளனர்.

ஆரம்பத்தில் ஊசிமருந்து, மற்றும் இரத்தம் ஏற்றுதல் மூலமே இது தொற்றியிருந்தது. ஆனால் இப்பொழுது பெண்பாலியல் தொழிலாளர்கள் மூலமே இது தீவிரமாக பரவிவருகின்றதாகக் கண்டறியப்பட்டுள்ளது. (உ)

### அரிய தமிழ் நூல்கள் பலவற்றை

# யாழ். பொது நூலகத்திற்கு வழங்க தமிழக முதல்வர் ஜெயா இணக்கம்

(கொழும்பு)

தென்னிந்தியாவிலுள்ள அகதி முகாம்களில் வாழும் இலங்கையருக்கு பிறப்பு, திருமண சான்றிதழ்களை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் முன்வந்துள்ளது. அவர்கள் தமது தாய்நாட்டிற்கு கௌரவமான பிரஜைகளாகத் திரும்புவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அவர்களுக்கு விரைவில் பிரயாண வசதிகளை ஏற்பாடு செய்தும் கொடுக்கவுள்ளது.

அவர்கள் மனித சரக்காக இங்கு கூட்டிவரப்படமாட்டார்கள் என்றும் அவர்கள் வாழ்வதற்கு பாதுகாப்பான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் புனர்வாழ்வு அகதிகள் மீள் குடியேற்ற அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தமிழ் நாட்டிலிருந்து நாடு திரும்பிய பின் செய்தி ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; தமிழ்நாட்டிலுள்ள 110 அகதி முகாம்களிலுள்ள ஏறத்தாழ ஒரு இலட்சத்து 32 ஆயிரம் இலங்கை அகதிகள் தாய்நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும் ஜயலத் தெரிவித்தார்.

தமிழ்நாடு அகதி முகாம்களுக்கு விஜயம் செய்த முதல் இலங்கை அமைச்சர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அங்குள்ள அகதிகளை பொறுமையாக இருக்கும்படியும் சட்டவிரோத முறைகளில் இலங்கைக்கு வர முயல வேண்டாம் எனவும் வேண்டிக் கொண்ட அமைச்சர், நாட்டில் முழு சமாதானம் வந்துவிட்டது என அவர்கள் திருப்தியடைந்தால் மட்டுமே வரலாம் என்றும் வரும்படி கட்டாயப்படுத்த மாட்டார்கள் என்றும், அவர்களின் விருப்பப்படி இந்தியாவில் சுதந்திரமாக வாழநினைத்தால் வாழலாம் என்றும் தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவுடன் அமைச்சர் அகதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான அனுமதியைப் பெறுவதிலுள்ள தாமதங்கள் பற்றியும் கலந்தாலோசித்துள்ளார்.

அத்துடன் யாழ். நூலகத்திற்கு அரிதான தமிழ்ப் புத்தகங்களை வழங்குவதற்கும் தமிழ்நாட்டிலுள்ள நவீன தொழில்நுட்பத்துடன் நூலகத்தை இணைத்துக் கொள்வதற்கும் முதலமைச்சர் சம்மதித்துள்ளார்.

அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க சென்னையிலுள்ள இரண்டு ஏக்கரிலுள்ள விடுதிகளில் இலங்கை மாணவர்கள் தங்குவதற்கும் இணங்கியுள்ளார். இறுதியாக அமைச்சர் இலங்கையின் இறுதி மன்னன் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனின் கல்லறைக்கு சென்று திரும்பிய பின் அதில் மன்னனின் சிலை ஒன்றையும் நிறுவுவதற்கான அனுமதியை மாநில அரசிடம் வாங்கியுள்ளதாகவும் அறியப்படுகிறது. (உ)

## வெங்காயச் செய்கை அமோகம்

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் கோடை வெங்காயச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

துன்னாலை, அத்தாய், நெல்லியடி, கரணவாய், குடத்தனைப் பகுதிகளில் தரவைகளாய் காணப்பட்ட இடங்களில் வெங்காயம் செய்கை செய்யப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

(உ-23)

## கிணற்றில் இருந்து சிசு மீட்பு

## கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தால் கொடிவாரம் அனுட்டிப்பு

இவர் காலடியில் வந்து படுத்துக் கொண்டது. இவர் அதற்கு உபதேசம் பண்ணினார். 'நீ ஏன் இப்படி எல்லாருக்கும் கெடுதல் செய்கிறாய்? நான் ஒரு மந்திரம் சொல்லித் தருகிறேன் அதை நீ எப்போதும் சொல்லிக் கொண்டிரு. உன்னிடமிருக்கிற கெட்ட குணம் விலகிப் போய் விடும், கடைசியில் கடவுள் தரிசனம் உனக்குக் கிடைக்கும் என்றார். பாம்பும் சரியென்று சொல்லிவிட்டு அதைக் கற்றுக் கொண்டது. உபதேசம் செய்து விட்டு அந்தப் பெரியவர் போய் விட்டார்.

அன்றிலிருந்து பாம்பு தன்னிடமிருந்த கெட்ட குணத்தையெல்லாம் விட்டு விட்டது. இப்போது அது யாரையும் கடிப்பதில்லை. இது தெரிந்தவுடனே அங்கேயிருந்த மாடு மேய்க்கின்ற பையன்களுக்கு துணிச்சல் வந்துவிட்டது. சும்மா இருப்பார்களா? அந்தப் பாம்பைக் கண்டால் கல்லை எடுத்து

அவர்களைச் சீறி நீ உன்னைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டாமா? என்றார் இந்தக் கதை மூலம் ஸ்ரீராமகிருஷ்ணர் 'நீ மற்றவர்களுக்கு கெடுதல் செய்யாதே! ஆனால் நீ இந்த உலகத்தில் வாழ்கிற போது மற்றவர்களுக்கு உன் மீது அச்சமும்-மரியாதையும் ஏற்படுகிற வகையில் நடந்துகொள்' என்றார்.

அதாவது பாம்பு பாஷையில் சொல்லப்போனால் படம் எடுக்கலாம்-ஆனால் கொத்தக் கூடாது. இந்தத் தகவலைக் கேட்டு விட்டு ஒருவர் என்னிடம் வந்தார். அவர் ஒருசினிமா டைரக்டர். 'சார்! பாம்புக்கும் எனக்கும் ஒரு ஒற்றுமை உண்டு' என்றார். 'என்ன' என்று கேட்டேன். 'பாம்பு படம் எடுத்தாலும் பார்க்கிறவர்கள் ஓடிப் போகிறார்கள். நான் படம் எடுத்தாலும் பார்க்கிறவர்கள் ஓடிப்போகிறார்கள்' என்றார். ●

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

## கராத்தே சங்க கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கராத்தே பிரதம ஆசிரியர்கள் மற்றும் சங்க நிர்வாக உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று மு.ப.11.00 மணிக்கு யாழ். ப.நோ.கூ.சங்க கேட்போர் கூடத்தில்இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தமிழீழ தேசிய கராத்தே சங்கம் கேட்டுள்ளது.

(ஷ)

## சிசு மீட்பு

(அராலி)

கிணற்றில் இருந்து அழுகிய நிலையில் ஒரு மாத சிசு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அராலி வடக்கு வயல் கிணறு ஒன்றில் அழுகிய நிலையில்மேற்படி சிசு காணப்பட்டதையடுத்து, பொதுமக்கள் பொலிஸாருக்குக் கொடுத்த தகவலின் பேரில் மீட்கப்பட்டது.

(உ-214)

## வேலணையில் கரும்புலிகளுக்கு அஞ்சலி

(ஊர்காவற்றுறை)

கரும்புலிகள் தினத்தையொட்டி வேலணை வங்களாவடி மாவீரர் நினைவுத் தூபியில் நேற்று அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

காலை 8.55 மணிக்கு தமிழீழ தேசியக் கொடியை அரசியல் துறையைச் சேர்ந்த மாதவனும், பொதுச்சுடரை வேலணை வர்த்தக சங்கசெயலாளர் மு. திருநாவுக்கரசும் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து இரண்டு நிமிட அகவணக்கம் இடம்பெற்றது.

வர்த்தகர்கள், அரச ஊழியர்கள், பொதுமக்கள் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ஷ-75)

## கொடிவாரம் அனுட்டிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேசக் கூட்டுறவுத் தினத்தை முன்னிட்டு கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கம் இன்று முதல் எதிர்வரும் 13ஆம்திகதி வரையான காலப்பகுதியை கூட்டுறவு வாரமாகக் கொண்டாடவுள்ளது.

இதனை முன்னிட்டு கொடி விற்பனை, கூட்டுறவாளர் கௌரவிப்பு, மாணவர் புலமைப் பரிசில் வழங்கல் போன்ற நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேலும் பாலர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், கவியரங்கம், புத்தகக் கண்காட்சி, நூல் அறிமுகம், சைக்கிள் ஓட்டப் போட்டி, சிரமதானப்பணி முதலியனவும் இக்காலப்பகுதியில் இடம்பெறவுள்ளன.

(ஷ)

## வறுமைக்கோட்டின்கீழுள்ள இருநூறு குடும்பங்களுக்கு இலவச கோழிக்குஞ்சுகள்

(யாழ்ப்பாணம்)

உலக வறுமை ஒழிப்புத்திட்டத்தின் கீழ் யாழ் குடாநாட்டில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 200 குடும்பங்களுக்கு இலவசமாக கோழிக்குஞ்சுகள் வழங்கப்படவுள்ளது.

இத் திட்டத்தில் போர் அனர்த்தத்தாலும் வறுமையாலும் பாதிக்கப்பட்டுள்ள குடாநாடெங்கும் பரவலாக வாழ்ந்துவரும் சகல குடும்பங்களும்தெரிவு செய்யப்பட்டு முதற்கட்டமாக 70பேருக்கும் இரண்டாம் கட்டமாக 130 பேருக்கும் கோழிக்குஞ்சுகள் வழங்கப்படவுள்ளன.

இப்பணிஎதிர்வரும் 10ஆம் திகதிக்குள் முடிவடைந்து விடும் எனவும் இவற்றை வளர்ப்போருக்கு மேலதிக சலுகைகளாக இலவசமாக கூடுகள், கோழித்தீவனம், ஏற்புத்தடை மருந்துகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படஉள்ளதாகவும் கால்நடை அத்தியட்சகர் எம்.தங்கராசா தெரிவித்துள்ளார்.

(ஷ-19,2)

# தமிழர் உரிமைக்குக் குரல் கொடுத்த தலைவர்

# சிவசிதம்பரம் தன்னலம் கருதாத சேவையாளர்

உடுப்பிட்டிச் சிங்கத்தின் குரல் ஓய்ந்தும், மலை சாய்ந்தும் ஒரு மாதம் ஆகிற்று. தன் சிம்மக் குரலால்- தமிழினத்தின் உரிமைக்காக ஐம்பதாண்டு காலமாக- வாதாடியவரின் உயிர் தமிழ் உலகை விட்டுப் பிரிந்தே விட்டது.

வடமராட்சியின் கண் கரவெட்டியில் மணியகாரன் பரம்பரையில் முருகேசு உடையாரின் மகனாக- 1923 ம் ஆண்டு யூலை 20ந் திகதி பிறந்தார். ஆரம்பக்கல்வியை அவரது- பேரனின் கொடையால் உருவான கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் பயின்று- மேற்படிப்பைக் கொழும்பு வெஸ்லிக் கல்லூரியில் பயின்றார். கொழும்பு சட்டக் கல்லூரியில் பயின்று சட்டத்தரணியானார்.

உப சபா நாயகர்

ஆரம்பத்தில் இடதுசாரிக் கொள்கையினை ஆதரித்து வந்தார். பின்பு தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா, என்று வீர கோசம் எழுப்பிய அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் அமரர் ஜீ ஜீ பொன்னம்பலத்தின் தலைமையில் 1960 ஆம் ஆண்டு தேர்தலில் உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அடுத்து 1965 -1966 ஆகிய தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அக்கால கட்டத்தில் உப சபாநாயகராக சிவசிதம்பரம் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். இதன் சிறப்பு என்னவென்றால் பாராளுமன்றத்தில் சிவா அன்று இல்லை. அவர் கொப்பளிப்பான் நோயினால் பாதிப்புப்புற்று தனது வீட்டிலேயே இருந்தார். இந்த நிலையில் அவர் அன்று தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

1970 ஆம் ஆண்டு தேர்தலில் உடுப்பிட்டித் தொகுதியில் சொற்ப வாக்குகளால் தோற்றுப்போனார்.

சங்கிலிப்பரிசு

அவர் தோற்ற வேளையிலும்-அவரது கடந்த கால சேவையினைப் பாராட்டி ஒரு விழாவினைகரணவாய் மக்கள் எடுத்தார்கள், அவ்விழாவில் சிவாவைகௌரவிக்குமுகமாக சைக்கிள் சின்னம் பொறிக்கப்பட்ட சங்கிலியைப் போடுவதற்கு ஏற்பாடும் செய்தார்கள். குறிப்பிட்ட விழாவில் அவர் எக்காரணத்தை முன்னிட்டும் என்னால் அந்தப்பரிசினைப் பெற முடியாது- தயவு செய்து என்னைக்கட்டாயப் படுத்த வேண்டாம் என்றபோது- அன்று நல்லூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் அமரர் சி.அருளம்பலம் அடுத்த தேர்தலில் வெல்லும் வரை இந்தச்சங்கிலி தலைவர் சிவாவின் மார்பிலே துலங்க வேண்டும் என்று கூறியபோது அங்கு பல்லாயிரமாக திரண்டிருந்தமக்கள் அதனைஆமோதிப்பது போலபெரும் குரல் எழுப்பினர். இவ் வேளையில்

**க. இளங்கோ**

கரவெட்டி

மீண்டும் சிவா உங்கள் அன்புக்கு கட்டுப்படுகிறேன், எனவே நீங்கள் தரும் சங்கிலியுடன்சேர்ந்துள்ள சைக்கிள் சின்னத்தை உங்கள் நினைவாகவைத்திருப் பேன்ஆனால் சங்கிலியை நாளைகாலைமந்திகை மருத்துவமனையில் சிறுவர் வார்ட்டுக்கு திருத்தம் செய்து- சுவரிலே சித்திரம் வரைவதற்கு பணம் தேவைப்படுவதால் அதனை வைத்தியசாலையில் ஒப்படைக்கிறேன் என்றுகூறியஅவர் அடுத்தநாள் காலையில் முதல் வேலையாக அந்தச்சங்கிலியை மந்திகை வைத்தியசாலையில் மாவட்ட வைத்தியஅதிகாரியாக இருந்த டாக்டர் கதிர்காமத்தம்பியிடம் வழங்கியது இன்றும் எம்மனதில்பசுமையாகத் தெரிகிறது.

யாருடைய மனதும்நோக நடக்காதவர். தனதுவாழ்வில் பெரும் பகுதியை ஆலயவழிபாட்டிலே செலவழித்தவர். இறுதிவரை தமிழ் மக்களுக்காகவே வாழ்ந்தவர். கரவெட்டியில் இரண்டு பாடசாலைகள் ஒன்றுவிக்னேஸ்வராக்கல்லூரி மற்றதுமாணிக்கவாசகர் வித்தியாலயம் இவை இன்று கம்பீரமாக எழுந்து நிற்ககாரணமானவர்கள், சிவாவின் முன்னோடிகள் அதனை அவரும் தொடர்ந்தார் அண்மையில் நூற்றாண்டு விழா கண்டமாணிக்கவாசகர் வித்தியாலயத்திற்கு ஆசியுரை கூட வழங்கியிருந்தார். மற்றது கரவெட்டிஅம்பம் மருத்துவமனை இதுவும் அமைந்துள்ள இடமும் சிவாவின்முன்னோர் நன்கொடையே. கரவெட்டி மக்களுக்கு குடிநீர் பிரச்சினை பெரும்பிரச்சினை. இதனை தன் சேவைக் காலத்தில் அத்துளு குடிநீர் திட்டத்தை உருவாக்கி இதன் மூலம் இன்றும் பல ஆயிரம் குடும்பங்கள் பலன் பெற வழி சமைத்தார்.

இன்று ஆறாந்திகதி அவரின் 31 ஆம் நாள் அஞ்சலிக் கூட்டம் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் பழைய மாணவர் சங்கத்தால்ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழ் உலகம் உள்ளவரை சிவாவின் பெயர் வாழும் அவர் புகழ்பாடும்.

### பல நூறு படித்தோம்

பனைமரத்தின்
பயன்பற்றி
பலநூறு
படித்திருந்தோம்
இப்போது
பங்கருக்கும்
பயன்படும் என்ற
புதியபாடம்
படிக்கிறோம்
புதியபாடம்
படிக்கிறோம்!
பதுங்கு குழியில்
பதுங்கிக்கிடக்கிறது
எங்கள்
பனைமரம்!

**க. கணேசலிங்கம்**

## 24 மணிநேர சேவை

(அராலி)

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையம் 24 மணி நேரமும் இயங்கி வருகின்றது (உ-214)

## சைவ பரிபாலனசபை தேர்வுக் காரியாலயம்

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபை தேர்வுக் காரியாலயம் நீராவியடியிலுள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் இயங்கிவருவதாக தேர்வுச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஷ)

### நிராயுதபாணிகளான

# புலிகள் கைது செய்யப்படுவது

# அவர்களை சீண்டிப் பார்க்கும் செயல்

## இரா சம்பந்தன் எம்.பி.கண்டனம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளைவேண்டுமென்றேசீண்டி அவர்களைக் கோபமடையச் செய்வதன் மூலம் சமாதான நடவடிக்கைகளைக் குழப்புவதற்குப் படையினர் சிலர் முயற்சிஎடுத்துவருகின்றனர்.

நிராயுதபாணிகளான தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் காரணமற்றுக் கைது செய்யப்படுவது குறித்து தமிழ்க் கூட்டமைப் பின் பாராளுமன்றக் குழுத் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்றஉறுப்பினருமான இரா.சம்பந்தன் விடுத்துள்ள அறிக்கையில்இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது;

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

நிராயுதபாணிகளான விடுதலைப்புலி உறுப்பினர்களை கைது செய்வதில்படையினரில் ஒரு பகுதியினர்முனைப்புடன் இருப்பது குறித்து தமிழ்க் கூட்டமைப்புக் கட்சிகள் தமது விசனத்தைத் தெரிவிக்கின்றன.

கடந்த 2ஆம் திகதிநிராயுதபாணிகளான 3விடுதலைப் புலிகள் மூதூருக்குப் படகில் சென்றுகொண்டிருந்த போதும்,

வேறு இருபோராளிகள் கன்னியாவுக்கும் வில்கம்விகாரைக்கும் இடையிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கைதுகள் வடக்குக் கிழக்கில் நிராயுதபாணிகளான புலிகளின் உறுப்பினர்களது சுதந்திரமான நடமாட்ட உரிமையை வழங்கும் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் 1:13வது சரத்தை மீறும் செயலாகும்.

இலங்கை அரசு,இதுவிடயத்தில் ஆயுதப்படையினருக்குத் தெளிவான வழிகாட்டல்களை வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## தொழிலுக்குச் செல்ல மீனவர்கள் அச்சம் மீன்விலை உச்சம்

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் கடந்த சில வாரங்களாக வீழ்ச்சி கண்டிருந்த மீனின் விலை தற்போது அதிகரித்து வருகின்றது.

இந்திய மீனவர்களின் அச்சுறுத்தல் காரணமாக இப்பகுதி மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்ல அச்சம் கொண்டிருப்பதே இவ்விலை அதிகரிப்புக்குக்காரணமாகும்;

இந்திய மீனவர்களின் கட்டு மீறிவரும்கண்மூடித்தனமான நடவடிக்கைகளைச் சுட்டிக் காட்டி மீனவர் சங்கப் பிரதிநிதிகள் ஜனாதிபதி பிரதமர் உட்பட பலருக்கு கடிதம் அனுப்பியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஷ-23)

## மணல் தட்டுப்பாடு எதிர்காலத்தில் ஏற்படும்

### விஞ்ஞானிகள் முன் எச்சரிக்கை

(கொழும்பு)

2004 ஆம் ஆண்டில் இலங்கையில் மணலுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்று புவியியல்துறை விஞ்ஞானிகள் முன்னெச்சரிக்கை செய்துள்ளனர்.

இது மின்சாரநெருக்கடியை விட மோசமாகஇருக்கும் என்றும் தெரிவித்துள்ளனர்.

மணல் தட்டுப்பாட்டினால் கட்டட நிர்மாணத்துறையில் பெரும்பாதிப்பு ஏற்படவாய்ப்புண்டுஎன்பதால், ஆற்று மணலுக்குபதிலாக கடல்மணலைப் பயன்படுத்துவது தொடர்பாக ஆய்வுகள்இடம் பெற்று வருகின்றன;

இதேவேளை ஒரு சதவீதத்திற்கு குறைவான உப்புத் தன்மை கொண்ட மணலை கட்டடநிர்மாணத்திற்குப் பயன்படுத்தலாம்என்றும் ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. (உ-3)

## சைவநெறித் தேர்வு

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலனசபையின் சைவநெறித்தேர்வு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை பாடசாலை ரீதியாக அனுப்பி வைக்குமாறு சைவபரிபாலன சபைத் தேர்வுச்செயலாளர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (உ-19)

## இணுவிலில் இலவச கண்பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

இணுவில் லயன்ஸ் கழகமும் கொழும்புமிட்ரவுண் லயன்ஸ் கழகமும் இணைந்து நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7. 30 மணிமுதல் இணுவில் பொதுநூல் நிலையத்தில் இலவச கண்பரிசோதனையையும் கண்ணாடி வழங்கலையும் மேற்கொள்ள இருக்கின்றன.

இதற்கென கொழும்பு மிட்ரவுண் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த 10 பேர் கொண்டகுழு யாழ். வந்துள்ளது.

இவர்கள்ஆயிரத்து500 கண்ணாடிகளையும் எடுத்து வந்துள்ளனர்.

கண்பார்வையற்றவர்கள் இதில் கலந்துகொண்டு பயன் பெறலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. (உ)

## இரு வருடங்களில் சமாதானம் நிலைபெறும்

### அமைச்சர் இம்தியாஸ்

(கொழும்பு)

நாட்டில் சமாதானத்தை அடுத்த 2 வருட காலத்தினுள் நிலைநாட்டவும், பொருளாதார ரீதியில் நாட்டைப் பலப்படுத்தவும் அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது என மக்கள் தொடர்பாடல் அமைச்சர்இம்தியாஸ் பாக்கிர் மாக்கர் தெரிவித்துள்ளார்.

தற்போது பின்னடைவு கண்ட பொருளாதார நிலை உள்ள போதிலும் சகலவித அத்தியாவசிய சேவைகளையும் பொருள்களையும் மக்களுக்கு அரசாங்கம் வழங்கும் என்று குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கத்தை தேர்ந்தெடுத்துள்ள மக்கள் கடன் பளுவை சுமக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறான கஷ்ட நிலையை சகித்துக்கொள்ளும் படியும் நாட்டின் சமாதானத்தில் நம்பிக்கைவைக்கும்படியும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தினால் கல்விமாணிப் பாடநெறி(சிங்களம், தமிழ்மூலம்) வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

கல்வி உளவியல், கல்விக் கோட்பாடுகளும் பிரச்சினைகளும், கலைத்திட்ட முகாமைத்துவம், கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும், ஆசிரியர் கல்வியும் கலைத்திட்ட விருத்தியும், கல்வி அளவீடு மதிப்பீடு ஆய்வு முறைகள், ஆரம்பக்கல்வி ஆகிய பாடநெறிகளுக்கான விரிவுரையாளர்களுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவுத்தினம் இம்மாதம் 20 ஆம் திகதியாகும். (உ-3)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(சுதுமலை)

நவாலி விவசாயிகள் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை காலை 8.30 மணிக்கு சம்மேளன செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக உடுவில் கமநல சேவைகள் திணைக்கள பெரும்பாக அலுவலர் வி. இளங்குமார் கலந்துகொள்ளவுள்ளார்.

மேற்படி கூட்டத்தில் அனைத்து விவசாயிகளையும் கலந்து கொள்ளுமாறு சம்மேளன செயலாளர் செ. ரமேஷ் கேட்டுள்ளார். (ஷ-252)

# கரும்புலிகள் நினைவு நாள் நிகழ்ச்சிகள்


கரும்புலி தின நிகழ்வை ஆரம்பிக்க மங்கள விளக்கேற்றல்...



விழா மைதானத்தை நோக்கி பான்ட் இசைக்குழுவின் அணிவகுப்பு...


வீர மைந்தன் கரும்புலி மில்லருக்கு அன்னை மாலையணிந்து அஞ்சலி செலுத்துகிறாள்...


வீர மறவனுக்கு இளம்பரிதி மலரஞ்சலி...

**யூலை — 05 — 2002 —**


மாவை சேனாதிராஜா (பா.உ), கலாநிதி என் சண்முகலிங்கன், வே.பாலகுமாரன், இளம்பரிதி உட்படஅரங்கமைந்தோர்...


"கரும்புலிகள்" இசைத்தட்டு பாகம் 2 வெளியிடப்படுகிறது...


நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் திரளில் ஒரு பகுதி...

படம்:- துன்னாலை திருநீபன்

## நாய் வேட்பாளர் நாடி வருகிறார்

(புளோரிடா)

நன்றிகெட்ட னிதர்களுக்கு வாக்குப் போடுவதால் பயனில்லை எனபதைஉணர்ந்தோ என்னவோ புளோரிடா மாநிலத்தின் சட்டமன்றத்தேர்தலில்நாய் ஒன்றை வேட்பாளராக நிறுத்தியிருக்கிறார் அதன் எஜமானார்.

அமெரிக்க அதிபர் ஜோஜ்புஷ்ஷின் சொந்தமாநிலமான புளோரிடாவில், குடியரசுக் கட்சியின் சார்பில் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை தேர்ந்தெடுப்பதற்கான முதற்கட்டதேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது.

இதில் புளோரிடாமாகாண வெளியுறவு அமைச்சர்ஹாரிஸை எதிர்த்துப் போட்டியிட இந்நாய் களத்தில் இறங்கியுள்ளது.

'அரசியல் வாதிகள் போல இந்நாய் மீது பாலியல் குற்றச்சாட்டுகள்இல்லை மிகவும்பொறுமையான விசுவாசமான வேட்பாளர் இவர்' என்று நாயின்சிறந்த குணாம்சங்களை முன்வைத்துஅதன் எஜமானார்பிரசாரம் செய்து வருவதுடன், நாயைப் புகழ்ந்து சுவரொட்டிகள் பலவும் புளோரிடா மாநிலத்தில் ஒட்டப்பட்டுள்ளனவாம்.

எமது அரசியல்வாதிகளும் கொஞ்சம்உசாரடையாவிட்டால், தெருநாய்கள் கூடவாக்குக் கேட்டு எமது வீட்டுக் கதவுகளைத் தட்ட நேரிடலாம் கவனம்.

(உ)

## அதியுச்சப் பாதுகாப்பு வலயத்தை வரையறை செய்தல் வேண்டும்

### பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

படைத்தரப்பினால் பிரகடனப்படுத்தப்படுகின்ற அதியுச்சப்பாதுகாப்பு வலயங்களின் சரியான அமைவிடங்களையும் அவை அமைந்திருக்கின்ற கிராம அலுவலர் பிரிவுகளையும் திட்டவட்டமாக அறியத் தருதல் வேண்டும்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. ஜி. பொன்னம்பலம், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யுத்த நிறுத்த ஒப்பந்தம் சம்பந்தமாக 2002 யூன் மாதம் 19 ஆம் திகதி தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைக்கு மேலதிகமாக இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதிலுள்ள கருத்து வேற்றுமைகளையும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவ அதிகாரிகளையும் சந்தித்து பேச்சுக்கள் நடத்தியிருந்தோம்.

யாழ். மாவட்டப் பாடசாலைகள் மற்றும் பொதுக் கட்டடங்களில் இருந்து இராணுவத்தினர் வெளியேறிவிட்டனர். ஆனால், பாதுகாப்புக் காரணங்களால், அதியுச்சப் பாதுகாப்பு வலயங்களில் உள்ள கட்டடங்கள் உரியவர்கள் பாவிக்க முடியாது என்கின்ற நிலைப்பாட்டை இராணுவ அதிகாரிகள் எடுத்துள்ளார்கள்.

இதன் காரணமாக, கணிசமான கட்டடங்கள், அவை கட்டப்பட்ட நோக்கங்களுக்குப் பாவிப்பதினின்றும் தடுக்கப்பட்டுள்ளன.

மக்களுடைய இயல்புவாழ்க்கையை முதன்மையாகக் கொண்ட ஒப்பந்தத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதியுச்சப் பாதுகாப்பு வலயங்களின் சரியான வரையறை எங்களுக்குத் தெரியவரவில்லை.

சமாதான நடவடிக்கையின் முன்னேற்றம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் முழுமையான செயற்பாட்டில்தான் தங்கியுள்ளதென்பது நீங்கள் அறியாததல்ல.

பொதுக்கட்டடங்கள், பாடசாலைகள், வணக்கத்தலங்கள் என்பவற்றிலிருந்து வெளியேறுவது அவற்றை அவற்றின் நோக்கங்களுக்குப் பயன்படுத்த முடியாமல் தடைசெய்வது என்பவற்றில் கருத்து வேற்றுமை உள்ளவரை சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காணமுடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)

## இன்று இலங்கை இந்திய அணி மோதல்

(லண்டன்)

லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்று வரும் முக்கோண கிரிக்கெட் போட்டித் தொடரின் இன்றைய ஆட்டத்தில் இலங்கை அணியும் இந்திய அணியும் மோதவுள்ளன.

இதேவேளை, இங்கிலாந்து-இந்திய அணிகளுக்கிடையில் நேற்றுமுன்தினம்நடைபெற்ற ஆட்டம் மழை காரணமாக இடை நிறுத்தப்பட்டமை தெரிந்ததே. (ஷ-9)

## நாளை மூன்று மணி நேர மின் தடை

(யாழ்ப்பாணம்)

புதிதாக குடாநாட்டுக்கு எடுத்துவரப்பட்ட ஜெனரேட்டர்கள் மூலமான பரீட்சார்த்த மின் விநியோகம் நேற்று பிற்பகல் 2 மணிமுதல் நான்கு மணிநேரம் மேற்கொள்ளப்பட்டது.

மீண்டும் இன்று காலை 9.00 மணிமுதல்பரீட்சார்த்த மின் விநியோகம் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும்,

நாளை காலை 9.00 மணி முதல் 12 மணிவரையான 3 மணிநேர மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்றும்.

பரீட்ச்சார்த்த முயற்சியின் போது கூட சிலநேரங்களில் விநியோகம் தடைப்படலாம் என்றும்.

மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஷ)

## சுதந்திர தின நிகழ்வில் விமானம் வீழ்ந்து நொருங்கியது; மூவர் பலி

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் லோஸ் ஏஞ்சல் மாகாண புறநகர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் அமெரிக்க சுதந்திரதின நிகழ்வைக் கொண்டாடிக் கொண்டிருந்த மக்கள் கூட்டத்தின் மீது ஒரு சிறிய தனியார் விமானம் நொருங்கி வீழ்ந்ததில் 3 பேர் கொல்லப்பட்டனர். 5 குழந்தைகள் உட்பட 16 பேர் காயமடைந்தனர்.

விமானியும் தரையிலிருந்த குழந்தையும் உயிரிழந்தவர்களில் அடங்குவர். (உ-9)

## ஈராக் ஜனாதிபதியின் மகன் மியாமியில் கைது

(வாஷிங்டன்)

ஐக்கிய அமெரிக்காவுக்குள் முறையான விசாஅனுமதியின்றி பிரவேசித்தன் காரணமாக ஈராக் ஜனாதிபதியின் மகன் முஹமட்சாவ்விமியாமியில் வைத்து கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

குடிவரவுச்சட்டத்தைமீறிய குற்றத்துக்காக கைது செய்யப்பட்ட இவர்மீதான விசாரணைகள் தொடர்வதாகவும், விசாரணைகள் முடிவுற்றதும் அவர் நாடுகடத்தப்படுவார். என்றும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை, சாவ்வியின் தாயார் விமானபணிப்பெண்ணாக கடமையாற்றியதுடன் ஈராக் ஜனாதிபதியின் மனைவிகளில் ஒருவர் எனவும் குடிவரவு குடியகல்வு சட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-9)

## வன்முறையை கட்டுப்படுத்த பிளேயர் நடவடிக்கை

(பிரிட்டன்)

வடஅயர்லாந்தில் இடம்பெற்று வரும் வீதி வன்முறைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் உறுதியளித்துள்ளார்.

நேற்று முன்தினம் வடஅயர்லாந்தில் அமைதி ஏற்படுத்துவது தொடர்பாக இஸ்பரோவில் அயர்லாந்து பிரதமர் பிரிட்டி அகர்னுடன் பேச்சு நடத்திய போதே ரொனிபிளேயர் இவ்உறுதியை அளித்துள்ளார்.

வடஅயர்லாந்தில் சமாதானத்தையும், அமைதியையும் நிலைநாட்ட எடுக்கும் முயற்சிகள் வீதி வன்முறைகளால் பாதிக்கப்பட்டு விடலாம் எனவும்,

பிரிட்டனின் ஆட்சியிலுள்ள வடஅயர்லாந்தில் இடம்பெற்று வரும் வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்காக 1998 இல் கைச்சாத்திடப்பட்ட 'பெரிய வெள்ளி' உடன்படிக்கையை அமுல்படுத்த அரசியல் கட்சிகள் ஆதரவு வழங்கமுன் வந்துள்ளதாகவும் பிளேயர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-9)

## 20வருடங்களில் 7 கோடி மக்கள் பலியாவர்

(லண்டன்)

எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த செல்வந்த நாடுகள் உதவி செய்யாவிட்டால்எதிர்வரும் 20 வருட காலத்தில் இந்நோயால் 7கோடி பேர் பலியாவரென ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

பலியாவோரில் அதிகமானோர் ஆபிரிக்க கண்டத்தை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## பலஸ்தீனத் தீவிரவாதிகள் 30 பேர் கைது

(ஜெருசலேம்)

மத்திய கிழக்கின் மேற்குக் கரையில் அமைந்துள்ள ஜெனீவா நகரில் அஸ்ஜயாவிடா பகுதிக்குள் புகுந்து சுற்றிவளைத்து வீடு வீடாகத் தேடுதல் நடத்திய இஸ்ரேல் படைகள் 30 பலஸ்தீன தீவிரவாதிகளைக் கைது செய்திருப்பதாக தெரியவந்துள்ளது.

(உ)

## ரொனல்டோவுக்கு சிறந்த வீரர்விருது வழங்கியது சரியல்ல

(லண்டன்)

2002 ஆம் ஆண்டு உலக கிண்ணத்துக்கான கால்பந்தாட்டஇறுதிஆட்டத்தில்ஜேர்மனியைபிரேசில் வென்றதில் பிரமாதம் எதுவுமில்லை.

ரொனால்டோவுக்கு சிறந்த வீரர் விருது வழங்கப்பட்டதும் சரியானதல்ல இவ்வாறு தெரிவித்துள்ளார். 1986 ஆம்ஆண்டு மெக்ஸிக்கோவில்நடந்தஉலகக்கிண்ண கால்பந்தாட்ட போட்டிகளில் ஆர்ஜன்டீனாவின் வெற்றிக்குக் காரணமான வரும் முன்னாள் கால்பந்து வீரருமான டியகோ மரடோனா

இவ்வாண்டு உலகக்கிண்ணத்தைபிரேசில்அணி கைப்பற்றியது.அவர்களது முழுத் திறமையினால் அல்ல அதிஷ்டத்தால்தான்.

இறுதிப் போட்டியை ஒரு சிறந்த ஆட்டமாகக்கொள்ள முடியாது.இதுஓர்இரண்டாம் தரமானஆட்டமஜேர்மனிஒரு மோசமான அணி. இந்தப் போட்டியைப் பிரமாதமாக வர்ணிக்கமுடியாது.

உலகக் கிண்ணப் போட்டிகளில் நடுவர்கள் தீர்ப்புஅளிப்பதில் முன்னேற்றம் தேவையென நான் முன்புகூறிய போதும் பலரும் என்னை விரோதியாகப் பார்த்தனர்.

இம்முறை போட்டிகளில் ஸ்பெயின், இத்தாலிபோன்ற சிறந்த அணிகளே நடுவரின் தவறான தீர்ப்புகளுக்குஇலக்காகி விட்டன என்றும் மரடோனா தனதுஅதிருப்தியை வெளியிட்டுள்ளார். (உ)

## மது அருந்திய விமானிகள் மியாமியில் கைது

(வாஷிங்டன்)

மது போதையில் விமானத்தைச் செலுத்த முயன்ற இரு விமானிகள கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்க மியாமி விமான நிலைய பரிசோதகர் களுடன் தர்க்கம் செய்த இந்த விமானிகள் தம்மை சோதனைக்கு உட்படுத்திக் கொள்ளாமல் விமானத்தில் ஏறினர். இந்த இருவிமானிகளிடம் மது வாடை வீசியதாக பொலிஸாரிடம் பரிசோதகர்கள் முறையிட்டதை அடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(உ-9)

## ஆப்கான் ஜனாதிபதிஹமீட் அமெரிக்கா மீது சாடல்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில், இராணுவநடவடிக்கைகளைக் கண்மூடித்தனமாக அமெரிக்கா மேற்கொண்டுவருவதாக ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட்ஹர்ஸாய் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆப்கானில் கடந்த வாரம் இரவுதிருமணவைபவ மொன்றில் அமெரிக்க விமானங்கள் குண்டுவீசியதில்170க்கும்மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டமை மற்றும் காயமடைந்தமைதொடர் பாகக்கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு அமெரிக்காவைச் சாடியுள்ளார். (ஷ-9)

## 255 கோடி கடனுதவி ஒப்பந்தம் கைச்சாத்து

(புதுடில்லி)

இலங்கைக்கு 255 கோடிரூபா கடனுதவி வழங்க இந்தியா முடிவு செய்துள்ளது.

இதற்கான உடன்பாட்டில் இலங்கைக்கானஇந்தியத்தூதுவர் கோபால கிருஷ்ண காந்தியும், இலங்கையின் நிதித்துறை அமைச்சு செயலர் பிரிந்த ரத்வத்தையும் கையொப்பமிட்டுள்ளனர்.

இக்கடனுதவியில் இந்தியாவிடமிருந்து கோதுமையை கொள்வனவு செய்ய 155 கோடி ரூபாவும் இலங்கையின் வர்த்தக செயற்பாட்டுக்கு 100 கோடி ரூபாவும் பயன்படுத்தப்படவுள்ளது. (உ-9)

## பாக் எல்லையில் 25 ஆயிரம் ஆப்கான் அகதிகள் பரிதவிப்பு

(வாஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தானுக்குள் நுழைவதற்காக 25 ஆயிரம் ஆப்கானிய அகதிகள் பலமாதங்களாக பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் காத்துக்கிடப்பதாக ஐ.நா.சபையின் அகதிகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் ஆப்கானின் புதிய இனக்குழுவானபஸ்தின்இனத்தைச்சேர்ந்தவர்கள் எனவும் இவர்கள் ஆப்கானின் வடக்கில் சிறுபான்மையாக இருப்பதால் துன்புறுத்தல்களுக்குள்ளானதாகவும்,

தலிபானின் பிரதானஆதரவு இவர்களுக்கு கிடைத்து வந்ததால் இவர்கள் தலிபான்கள் எனகுற்றம் சாட்டப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-9)

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு
**குறள்**

# வலம்புரி

## கூட்டுறவு சேவை

இன்று சர்வதேச கூட்டுறவாளர் தினம். தங்கத்தால் செய்யமுடியாத வேலையை சங்கத்தால் செய்யமுடியும்என்ற உண்மை கூட்டுறவுத்துறையினூடாகவே நடைமுறைப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். அத்தகையதோர் இலக்கை அடையும் நோக்கோடு தான் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட பல்வேறு சங்கங்கள் தோற்றம் பெற்றன.

ஆனால் யாழ்மாவட்டத்தைப் பொறுத்தவரை கூட்டுறவுச் சங்கங்கள் எந்தளவுதூரம் தமது பணியை மக்கள் சேவை என்ற இலக்குடன் ஆற்றுகின்றன என்ற கேள்வி எழவே செய்யும்.

அதேவேளை யுத்த சூழ்நிலையிலும், மக்கள் பணி என்ற சேவையில் இருந்து இம்மியும் விலகாது சேவையாற்றுகின்ற ஒரு சில பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கவே செய்கின்றனஅச்சங்கங்களுக்கு எல்லாம் முதன்மையானதாகஇயங்கும் சங்கத்தை யாழ் மாவட்டத்தில் சுட்டிக்காட்ட வேண்டுமாயின் அது கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாகவே இருக்கும்.

அச்சங்கத்தின் தலைவரின் நிர்வாகத்திறன், ஆளுமை என்பன சங்கத்தின் சிறப்பானசேவைக்கு அடிப்படையாக அமைய அவரோடு இணைந்து பொது முகாமையாளர், இயக்குனர் சபையினர் பணியாளர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றனர். இதனால் யாழ் மாவட்டத்தில் கட்டைவேலி - நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஏனைய சங்கங்களுக்கெல்லாம் உதாரணமாக விளங்குகிறது.

இவ்வுண்மை ஒருசிலருக்கு கசப்பானவையாக இருப்பினும் 'என்னைப் பற்றிஎனக்குத் தெரியாது ஆனால் மற்றவர்களுக்குத் தெரியும்' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் யாழ் மாவட்டத்தில் இயங்குகின்ற சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் ஊழல் நிறைந்ததாக, மோசடிகள் மலிந்ததாக இருப்பதை மக்கள் அறியாமல் அல்ல. மக்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதை வெளிப்படுத்தவும் மக்கள் பின்நிற்கப்போவதில்லை என்பதைஇன்றைய கூட்டுறவாளர் தினத்தில் உணர்வது அவசியம்.

# இன்று 80-வது சர்வதேச கூட்டுறவாளர் தினம்

## குடாநாட்டில் தேய்ந்துபோகும் கூட்டுறவை

## கட்டியெழுப்ப மக்கள் முன்வரவேண்டும் !

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை வருடந்தோறும் யூலை மாதத்தில் வரும் முதலாவது சனிக்கிழமையில் கொண்டாட வேண்டுமென்று சர்வதேசகூட்டுறவு இணைப்பு ஸ்தாபனம் பிரகடனப்படுத்தியுள்ளது.

சர்வதேச கூட்டுறவு இணைப்பு ஸ்தாபனத்தின் பிரகடனத்திற்கேற்ப இன்று 6ம் திகதி சனிக்கிழமை 80 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினம் சர்வதேச அமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ள 97 நாடுகளில் உள்ள 835 மில்லியன் அங்கத்தவர்களால் கொண்டாடப்படுகிறது. இதில் 26 ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளில் 500 மில்லியன் அங்கத்தவர்கள் இத்தினத்தை இன்று கோலாகலமாகக் கொண்டாடுகிறார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை ஒன்றின் பிரகாரம் 2300 மில்லியன் மக்கள் அல்லது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உள்ள மொத்தச் சனத்தொகையில் 59 வீதத்தினர் கூட்டுறவுத் துறையுடன் தொடர்பு உடையவர்களாக இருந்துவருகிறார்கள்.

சர்வதேச கூட்டுறவாளர் தினம் கொண்டாடப்படுகின்ற யூலை மாதம் பூராவும் பட்டி தொட்டிகளிலும் மூலை முடுக்குகளிலும் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் அனைத்திலும் இன, மத, அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் ஏழு வர்ணக் கொடி பட்டொளி வீசிப் பறக்கவிடப்படும்.

யாழ். குடாவில் கடந்த காலங்களில் இடம்பெற்று வந்த யுத்த அனர்த்தங்களினால் யாழ்மாவட்டத்தில் உள்ள சகல கூட்டுறவு நிறுவனங்களும் கோடிக்கணக்கான பெறுமதி வாய்ந்த சொத்துக்களை இழந்த நிலையில் சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை பெரியளவில் கொண்டாடாது சிறியளவில் கூட்டுறவுக் கொள்கைகளின் வழிநின்று கொண்டாடி வந்துள்ளன.

தென்னிலங்கையில் உள்ள கூட்டுறவாளர்களுக்கு முன்னுதாரணமான கூட்டுறவாளர்களாக விளங்கியவர்கள் வடபகுதிக் கூட்டுறவாளர்கள் என்றொரு நிலையிருந்த காலம் மாறி வடபகுதியில்உள்ள கூட்டுறவாளர்களுக்கு தென்னிலங்கைக் கூட்டுறவாளர்களும் கிழக்கிலங்கைக் கூட்டுறவாளர்களும் முன்மாதிரியாகத் திகளும் காலம் உருவாகியுள்ளது. இந்நிலைக்கு வடபகுதிக் கூட்டுறவாளர்கள் தான் காரணம் என்று கூறமுடியுமா?

யாழ் மாவட்டத்தில் கூட்டுறவு இயக்கம் செழிப்புற்று இருந்த காலத்தில் ஒவ்வொரு கூட்டுறவுநிறுவனமும்போட்டி போட்டு சர்வதேச கூட்டுறவாளர் தினத்தைக் கொண்டாடியதுடன் சாதாரண மக்கள் மத்தியில் கூட்டுறவு பற்றிய அறிவையும், ஆர்வத்தையும் போட்டிகள் வைத்து ஏற்படுத்திவந்தன.

இதன் காரணமாக கிராமிய மட்டத்தில், பாடசாலை மட்டத்தில் கூட்டுறவு சங்க மட்டத்தில் கூட்டுறவு பற்றிய விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் யுத்த சூழ்நிலையில் சிறிய அளவில் கூட சர்வதேச கூட்டுறவாளர் தினத்தைக் கொண்டாட முடியாமல் போனது.

இலங்கையிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு உச்ச நிறுவனமாக விளங்கும் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை

இன்று கொண்டாடப்படவுள்ள 80வதுசர்வதேசகூட்டுறவாளர் தினத்தைஒட்டி மாவட்டரீதியிலும் மாகாணரீதியிலும் தேசியரீதியிலும் கூட்டுறவில் விழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில் பேச்சு, கட்டுரை போட்டிகளை பாடசாலைமட்டத்திலும் கூட்டுறவுஊழியர்கள் மட்டத்திலும் நடத்திய போதும் யாழ்மாவட்டக் கூட்டுறவு நிறுவனங்கள் பாடசாலைகள் எதுவும் பங்கு கொள்வதற்குரிய வாய்ப்புக்களை எற்படுத்திக் கொடுப்பதற்கு யாழ்மாவட்ட கூட்டுறவாளர்கள் தவறிவிட்டனர். இது கூட்டுறவாளர்களுக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கும் செயலாகஇருந்துவிட்டது,

கடந்தகால யுத்தசூழ்நிலை மாறி சமாதானசூழ்நிலை நிலவிவரும்இக்காலகட்டத்தில் கூட்டுறவுத் தினத்தைக் கொண்டாடுவதற்கு யாழ் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுநிறுவனங்கள் பின்னிற்பதேன்?

கூட்டுறவு நிறுவனம்என்றால் வெறுமனே அரசி.சீனி பருப்பு, பால்மா போன்ற நிவாரணப் பொருட்களையும் மற்றும் உணவுப்பொருட்களையும் மக்களுக்கு வழங்கும் நிறுவனங்கள் என்ற பெயரோடு மட்டும் நில்லாமல்தமிழர் தாயகத்தின் முக்கிய பிரதேசங்களாக விளங்கும் கிராமப்புறமக்களின் நலனிலும் அவர்களது தேவைகளை இனங்கண்டு அவர்களுக்குச் சேவை செய்வதிலும்முன்வர

குறிப்பாக கிராமப்புறமக்கள்மத்தியில்கூட்டுறவுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு சர்வதேச கூட்டுறவாளர் தினத்தையும் முக்கிய கூட்டுறவாளர்களது தினங்களையும் நல்லமுறையில் நினைவு கூர்வது அவசியமாகும்.

கூட்டுறவாளன்

## வட- கிழக்கு நிருபர்களுக்கு பயிற்சிப் பாசறை 3 தினங்கள் கொழும்பில்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாணத்திலுள்ள செய்தி நிருபர்களுக்கான மூன்று நாள் பயிற்சிப் பாசறையினை கொழும்பிலுள்ளஅமெரிக்கஉயர்ஸ்தானிகர் காரியாலய தகவல்துறைப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கை மன்றக் கல்லூரியில் எதிர்வரும் 8, 9, 10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இப்பயிற்சிப் பாசறையில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 40தமிழ் நிருபர்கள் கலந்து கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ- 3)

## உளளூராட்சித்தேர்தல் வேட்பாளர்கள் கடமைக்குத் திரும்பலாம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் கடந்தமார்ச்மாதம் 5ம்திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சிதேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 25ம்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதை அடுத்து இந்ததேர்தலில் போட்டியிட வேட்புமனுக்களைச்சமர்ப்பித்த அரசஊழியர்கள் மீண்டும்தமது கடமைக்குச்செல்லவும் சம்பளங்களைப் பெறுவதிலுள்ள சிக்கல் நிலைகுறித்தும் ஐ.தே கட்சியின் தலைமையகத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

இவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பாகஐ.தே.கட்சி பொதுச்செயலாளரால் பிரதமரின் கவனத்திற்கும் பிரதமரால் இவ்விடயம் அமைச்சரவைக்கும் கொண்டுவரப்பட்டதையடுத்து அவ்வாறானஅரசஊழியர்கள் மீண்டும் தமது விருப்பின்பேரில் கடமைக்கு திரும்பவும் சம்பள நிலுவையைபெறவும் அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. (உ-9)

## தினசரி தியானம்

### சுவர்க்கமும் நரகமும்

நல்ல மனமுடையவர்க்கு
உலகமெல்லாம் சுவர்க்கம்
கெட்ட மனமுடையவர்க்கு
அதே உலகம் நரகம்.

சுவர்க்கத்தையோ நரகத்தையோ எனக்கு நானே உண்டுபண்ணிக் கொள்கிறேன் என்பதை நான் விரைவில் உணர்ந்து கொள்வேனாக.

துரியோதனனும் தர்மராஜாவும் ஒரே இராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். துரோணாச்சாரியர் என்ற ஒரே குருவிடம் பயிற்சி பெற்றவர்கள். ஆனால் குருவின் ஆக்ஞைப்படி நல்லவன் யாராவது உண்டாவென்று உலகில் தேடிப்பார்த்த துரியோதனனுக்கு நல்லவன் யாரும் தென்படவில்லை. தர்மனுக்கோ கெட்டவன் யாரும் அதே உலகில் அதே காலத்தில்அகப்படவில்லை. நலம், கேடு எங்கே இருக்கின்றன? உலகில் அல்ல, தன் மனதில்.

- ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

## ஆங்கிலதின போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கிலதின எழுத்துப் போட்டிகள் யாழ். இந்துமகளிர் கல்லூரியிலே இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளன. (உ-19)

## சமூகமளிக்குக

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துமகளிர் கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவின் கணனிப்பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்களை எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப.3.00 மணிக்கு சமுகமளிக்குமாறு இந்துமகளிர் கல்லூரி பிரதியதிபர் திருமதி ப. பேரின்பநாதன் அறிவித்துள்ளார்.

## 12 வருடங்களின் பின் கரும்புலிகள் தின நிகழ்வுகள்

(ஊர்காவற்றுறை)

கடந்த பன்னிரண்டு வருடங்களின் பின்பு வேலணை மத்திய கல்லூரியில் நேற்று கரும்புலிகள் தினம் கொண்டாடப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியக் கொடியை பாடசாலை பதில் அதிபர் ப. ஆரூரன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து கரும்புலிகள் நினைவு கூட்டமும் நடைபெற்றது. (உ-75)

## நிதியமைச்சு மறுப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை அரசாங்கம் குறைத்துள்ளதாக, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சங்கம் தெரிவித்துள்ள குற்றச்சாட்டை நிதியமைச்சு முற்றாக மறுத்துள்ளது.

வரவு செலவுத் திட்டத்தின் மூலம் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (உ-3)

வடக்கு - கிழக்கு மகாண மட்ட

# உதைபந்தாட்டப் போட்டி இன்று யாழ்ப்பாணத்தில்

(சுண்டுக்குளி)

வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சினால் மாவட்டங்களுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் விளையாட்டுப் போட்டிகளில் உதைபந்தாட்டப்போட்டியும், கூடைப்பந்தாட்டப் போட்டியும்(ஆண்கள்) இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

துரையப்பா விளையாட்டு அரங்கில் ஆரம்பமாகும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு யாழ் மாவட்ட அணியை எதிர்த்து திருமலை மாவட்ட அணியும், முற்பகல் 10 மணிக்கு அம்பாறை மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணியும், பி.ப 3.45 மணிக்கு மட்டக்களப்பு மாவட்ட அணியை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட அணியும் விளையாடவுள்ளன.

வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகும் கூடைப்பந்தாட்டப் போட்டியில் மு.ப 9மணிக்கு மன்னார மாவட்ட அணியை எதிர்த்து திருகோணமலை மாவட்ட அணியும் பி.ப 3.30 மணிக்கு வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து மட்டக்களப்பு மாவட்ட அணியும் விளையாடவுள்ளன. (த-110)

## நெல்லியடியில் ...

கரும்புலி மில்லரின் உருவச் சிலைக்கு மில்லரின் தாயார் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத் தினார்.

தொடர்ந்து விடுதலைப்பலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர். இளம்பரிதி, போராளி நிசாந்தன் பெண் போராளிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதி ராஜா, எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் பொது மக்களும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து கரும்புலிகள் நினைவுநாள் எழுச்சிக் கூட்டம் பா. தவயோகன் தலைமையில் ஆரம்பமாகியது.

நிகழ்வில் கரும்புலிகள் பாகம் இரண்டு மற்றும் கடற்கரும்புலி கள் பாகம் 5ஆகிய ஒலிப்பேழைகள் வெளியிடப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர் வே.பாலகுமாரன், மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்விழி பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, எம்.கே.சிவாஜிலிங்கம் யாழ் பல்கலைக்கழக சமூகவியல் துறைத்தலைவர் கலாநிதி என் சண்முகலிங்கன் கவிஞர் வேலணையூர் சுரேஸ், கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச உறுப்பினர் க.சூரியகுமார் ஆகியோர் உரையாற்றினர். (இ. 41-23-247-19-06)

## புரிந்துணர்வு...

வடிவம்பெறும் தறுவாயில் உள்ளது இதில் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என்றும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போதைய தேர்தல் முறை மாற்றம் குறித்து அரசாங்கம் சகல கட்சித்தலைவர்களையும் சந்தித்து அடுத்தவாரம் பேசவுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கலந்து கொள்ளும் இப்பேச்சுவார்த்தையின் போது தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசாரத் தேர்தல் முறையை முற்றாக ஒழித்து கலப்புப் பிரதிநிதித்துவ முறையைக் கொண்டு வரவுள்ளதாகவும் விருப்பு வாக்கு முறையை ஒழிப்பது தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(வ)

## திருமலையில்...

கைது செய்யப்பட்ட போராளிகளான விமல், இசைக்குயில், அழகன், சபேசன், வாஞ்சி ஆகிய ஐவரும் விடுதலை செய்யப்பட்டதை அடுத்து நேற்று நடைபெறவிருந்த ஹர்த்தால் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## தென்னிலங்கை...

இதேவேளை இக் குழுவினர் இன்று முற்பகல் 9.30 மணிக்கு யாழ இந்துக் கல்லூரியில் மாணவர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

அத்துடன் மாலை 6 மணிக்கு வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறும் கலாசார காண்பியத்திலும் கலந்து கொள்வர். (இ)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வடக்கு அச்சுவேலியைச் சேர்ந்த ரி. றகீம்ராஜ் என்பவரது ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வலம்புரி அலுவலகத்தில் வந்து தகுந்த ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (ந)

## வெடி பொருள்...

குடாநாட்டுக்கு எடுத்து வரமுற்பட்டவருக்கு சாவகச்சேரி நீதி மன்றம் தண்டம் விதித்துள்ளது.

கடந்த மாதம் 21ந் திகதி விசுவமடுவில் இருந்து ரீ.56 ரக துப்பாக்கிக்குப் பணன்படுத்தப்படும் 58 ரவைகள் மற்றும் 80கிராம் வெடி மருந்துப் பொருட்கள் ஆகியவற்றை எடுத்து வந்த நபர் முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

பிரஸ்தாப நபரை பொலிசார் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதி மன்றில் ஆஜர்படுத்திய போது நீதவான் வெடிபொருட் தடைச் சட்டத்தின் கீழ் பிரஸ்தாப நபர் இரண்டாயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்த வேண்டும் என்றும். தவறின் மூன்று மாதம் கடூழியச் சிறைத்தண்டனையை ஏற்க வேண டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.(இ.23)


## உடன் தேவை

பகல், இரவு வேளைகளில் கடமையாற்றுவதற்கு சிற்றூழியர்கள் தேவை. கல்வித்தகுதி தரம் 8, 30 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். தகுதியானவர்கள் தங்களது விண்ணப்பங்களை:-

நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி,
இல. 15 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு உடன் அனுப்பி வைக்கவும்.

வலம்புரி நிர்வாக உத்தியோகத்தர்

## தவறிவிட்டது

கல்வியங்காட்டிற்கும் நெல்லியடிக்குமிடையில் முக்கிய ஆவணங்களுடன் பை ஒன்று தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள்: வலம்புரி இல:15,வெள்ளாந்தெருயாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

[5652]


# கொடிக்கம்பம் உயர்த்திய போது மின்சாரம் தாக்கி நால்வர் பலி

தெமட்டக் கொடவில் பரிதாபம்

(கொழும்பு)

கொழும்பு தெமட்டக் கொட ஊறுவத்தையில் உள்ள அந் தோனியார் ஆலய கொடிக்கம்பத்தை போது அது மின்கம்பிக ளில் முட்டியதால் மின்சாரம் தாக்கி நான்கு போல் ஸ்தலத்திலேயே பலியானார்கள் 15போர் படுகாயத்துக்குள்ளானார்கள்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் காயப்பட்டவர்கள் கொழும்பு ஆஸ்பத்திரியும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் மூவரின் நிலை கவரைக்கிடமக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## மண்ணுக்கு விடுதலை...

தியாகத்தில் இருந்துதான் எமது விடுதலைப் போர் உன்னதமான வளர்ச்சி நோக்கி பாதம் பதித்தது.

காலம் கனிந்திருக்கிறது. நாங்கள் நிலைமைக்கேற்ப செயற்பட்டுக் கொண்டுவருகின்றோம் புரியக்கூடியவர்கள் இதனைப் புரிந்து கொள்ளுங்கள்.

ஒரு சிறிய இனம் பெரிய ஒரு இனத்தின் படையை எவ்வாறு சமாளிப்பது இந்த எண்ணம் தலைவருடைய சிந்தனையில் நீண்டகாலமாக இருந்து வந்தது. அவருடைய மனதிலே உருவான அந்த எண்ணக் கரு 1987ம் ஆண்டு செயலுருவம் பெற்றது. கரும்புலிகளின் சக்தியை விஞ்சிய சக்தி இந்த உலகில் ஏதும் உண்டா?

எங்களுடைய குற்றங்கள் நாங்கள் வரி எடுக்கும் முறை இந்தக் கூட்டணியினர் விட்ட குற்றங்கள் அல்லது எங்களுடைய பழைய சந்ததியினர் விட்ட குற்றங்கள் இந்த இயக்கம் விட்ட குற்றம், எங்களுடைய தவறுகள், பலவீனங்கள், பேரினவாதங்கள், கொடுமைகள், இனவாதக் கூச்சல்கள், உலகம் செய்கின்ற அநீதி, அடக்குமுறை, அப்பட்டமான மனித உரிமை மீறல் எல்லாவற்றிற்கும் மேலாக இந்த உலகத்திலேயே எவராகிலும் எட்ட முடியாத, விளங்கமுடியாத, புரிந்து கொள்ள முடியாத ஒரு புதிய படையணி உருவாகியுள்ளது. அப்படையணி அமைதிக்காற்று, சண்டைக் காற்று எந்தக் காற்று வீசிக்கொண்டிருந்தாலும் சுதந்திரம் என்ற விடுதலை அடையப்படும் வரை தமது கடமைகளைத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது என்றும் கூறினார். (க-41)


இலங்கை மின்சார சபை - யாழ் பிரதேச அலுவலகம்

மின் விநியோகம், யாழ். குடாநாடு.

இன்று 2002.07.06ம் திகதி சனிக்கிழமை 9.00 மணி தொடக்கம் மறுநாள் 2002.07.07 பகல் 12.00 மணிவரை புதிய "அல்ஸ்ரம்" மின் பிறப்பாக்கிகள் மூலம் யாழ். குடாநாட்டுக்கு பரீட்சார்த்த முறையில் மின் விநியோகம் இடம்பெறுவதால் அடிக்கடி மின்சாரம் தடைப்படும்.

2002.07.07ம் திகதி பகல் 12.00 மணியிலிருந்து யாழ். குடாநாடு முழுவதும் "அல்ஸ்ரம்" மின்பிறப்பாக்கி மூலம் 24 மணிநேர மின் விநியோகம் ஆரம்பிக்கப்படுகின்றது. இந்த விநியோகத்தில் ஒரு வாரம் வரை சில நேரங்களில் தடைகள் ஏற்படக்கூடும் என்பதையும் அதன் பின்னர் மின் விநியோகம் சீராகும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

பிரதேச மின் பொறியியலாளர்
இலங்கை மின்சாரசபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும"

இலங்கை மின்சார சபை.

[4625]

YOGI HOME SCIENCE ACADAMY

கேக ஐசிங ஞாயிறறுககிழமை பிரிவு, புதிய வகுபபு 07-07-2002 ஆரமபமாக உளளது. ஏனைய மனையியல் பயிற்சி வகுப்புக்களும் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சேர விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும். 75, அம்மன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்

(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில் முன்பாக)

[5635]

எம். டி. குணசேன




கண்காட்சியும், புத்தக விற்பனையும்!

கல்வியாளர்கள், படைப்பாளிகள், மாணவர்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கு அமைய,

09.07.2002 வரை நீடிக்கப்பட்டுள்ளது

யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடம்.



அனைத்து நூல்களுக்கும் 10% விலைக்கழிவு

அனைவரும் வருக!

[4626]

வடக்கின் மாபெரும் துடுப்பாட்டம்

(சென்றல் - சென் ஜோண்ஸ்)

எதிர்வரும் 12ம், 13ம் திகதிகளில் நடைபெற உள்ள மேற்படி போட்டிகளின் போது

⇨ மைதானத்தில் கடைகள் அமைப்பவர்களும்
⇨ பதாகைகள் (Banners) கட்டுபவர்களும்

துடுப்பாட்ட போட்டிக் குழுவின் பொருளாளருடன் தொடர்பு கொண்டு இம் மாதம் 10ம் தேதிக்கு முன்னர் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

யாழ் மத்திய கல்லூரி
யாழ்ப்பாணம். அதிபர்.

[C/4624]

மீண்டும் கைதடிச் சந்தியில்........

ஓம் முருகன் நகை மாடம்

அன்புடையீர்,

இன்று காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரையுள்ள சுப வேளையில் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது. இவ்வேளையில் வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.



ஓம் முருகன் நகை மாடம்,
இல.5, கைதடிச்சந்தி,
கைதடி.

இங்ஙனம்
உரிமையாளர்
பா.மூர்த்தி

[C/4627]

விசேட கழிவு

மொத்தமாக மஞ்சி பத்தி கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

| | |
|---|---|
| 1000 டசி மேல் | - 45% |
| 500 டசி மேல் | - 46/50 |
| 100 டசி மேல் | - 45% 48% |

ஏக விநியோகஸ்தர்கள்
ஸ்ரீ முத்துமாரி அம்மன் றேடர்ஸ்
171, கே.கே.எஸ் றோட்
யாழ்ப்பாணம்.
T.P.NO - 021-3328

[5638]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.